
# பெண்களுக்கான சட்டவியல் விளக்கம்




பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

# பெண்களுக்கான சட்டவியல் விளக்கம்

வெளியீடு :
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*Title* : A Booklet on Legal Literacy for Women

*Subject* : Women's Studies

ISBN : 955-9261-10-X

*Contributors* : 1. Ayoob Khan, Attorney-at-Law, LL.B.
2. Suganthi Kandasamy, Attorney-at-Law, LL.B.
3. Rocky Ariyaratna, Attorney-at-Law
4. Thilanee Rajapaksa, Attorney-at-Law

*Paper* : White Bank

*Typesetting* : Professional Publishers,
215 F/2/6, Park Road,
Colombo-5. T.P.: 593331

*Printing* : Perfect Printers,
130, Dias Place,
Colombo-12.

*Published by* : Women's Education & Research Centre, Nov.98.
58, Dharmarama Road,
Colombo-06.
T.P.: 595296

# பெண்களுக்கான சட்டவியல் விளக்கம்

வெளியீடு :

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

மனிதருக்குள் ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தகைய வித்தியாசமில்லை என்பதும்,

ஆண்கள் அடைய விரும்பும் சீர்திருத்தங்கள் போலவே பெண்களுக்கும் அளிக்க வேண்டும் என்பதும்,

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துக்கள் அனுபவிப்பதென்பது சர்வ சுதந்திரமாய் இருக்க வேண்டும் என்பதும்,

இதைப்பற்றி இதுவரை யாரும் எவ்வித கிளர்ச்சியும் செய்யவில்லை என்பதைப் பற்றியும், கணவன் அயோக்கியனாக இருந்தாலும், கெட்ட வியாதிக்காரனாய் இருந்தாலும் மனைவிகள் அவனை விட்டு விலகி வாழலாம் என்றும்,

இப்படி விலகி வாழ்ந்தாலும் புருஷன் ஜீவனாம்சமும் அவன் சொத்தில் பாத்தியதையும் இருக்க வேண்டும் என்றும், உபந்நியாசகராகிய திரு. நாராயண குரு அவர்கள் பேசியுள்ளார்.

- பெரியார்

# பொருளடக்கம்

முன்னுரை

1. ஆட்கள் பற்றிய சட்டம் - ஓர் அறிமுகம் ........................ 1

- சுகந்தி கந்தசாமி

(அ) திருமணச் சட்டம்

(ஆ) விவாகரத்துச் சட்டம்

(இ) பாதுகாவல் சட்டம்

(ஈ) பராமரிப்புச் சட்டம்

2. மனித உரிமைகள் சட்டமும் பெண்களும் ........................ 47

- அயூப் ஹரான்

(அ) சர்வதேச ஆவணங்கள்

(ஆ) அரசியலமைப்பு உத்தரவாதம்

(இ) இலங்கையில் பெண்ணுரிமைகள்

3. குற்றவியற் சட்டம் ........................ 80

- ரொக்கி ஆரியரத்தின

(அ) பெண்களுக்கு எதிரான வன்முறை

(ஆ) இல்லத்து / வேலைத்தல வன்முறை

4. ஆதனச் சட்டமும் வழியுரிமைச் சட்டமும் ........................ 89

- திலானி ராஜபக்ச

(அ) ஆதன விருப்பாக்கம்

(ஆ) இறுதி விருப்பாவணம் ஆக்கல்

5. பயிற்சி முறை வழிகாட்டி ........................ 101

# முன்னுரை

இச் சிறுநூல் பல விதங்களில் பயனளிக்கும் என்பது எமது எண்ணம். பொதுவாக எல்லோருக்கும் பயன்பட்டாலும் சிறப்பாக இது பெண்களை மனதிற் கொண்டே எழுதப்படுகிறது.

நம் நாட்டில் பெண்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினாலும் சட்ட ரீதியான அறிவு விளக்கம் இல்லாமலே இருக்கிறார்கள். பொதுவாக கிராமப்புற பெண்களும் வெளியுலகிற்கு வராமல் சமையல், சேவை என வீட்டுப் பணிகளில் மூழ்கி உள்ள பெண்கள் சட்ட அறிவைத் தேடி நாடிப் போவதில்லை. அவர்களுக்குப் பிரச்சனைகள் வரும்போது, அவர்களது உரிமைகள் பறிக்கப்படும்போது கலங்கி நிற்கும் இப்பெண்கள் அடுத்தவர்களில் தங்கி நிற்க நேரிடுகிறது. அறியாமையினால் ஏமாற்றத்திற்குள்ளாகும் பல்வேறு சஞ்சல அநுபவங்களுக்குள்ளும் தள்ளப் படுகிறார்கள். அறிவு பலத்தைத் தரும் என்றாலும் இப் பிரத்தியேக நுணுக்கள் நிறைந்த அறிவு தம் வாழ்க்கைத் தடம் புரளாமல் இருக்க உதவும். தன் கௌரவத்தை தமது உரிமைகளை, தன் இருப்பை ஸ்திரப்படுத்த ஏதுவாக இருப்பதற்கு வழிகோலுவது அறிவு ஒன்றே. சமூக அந்தஸ்து, செல்வம் போன்ற ஏனைய பல பாக்கியங்களை உடையவர்களைக் கூட சட்ட அறியாமை பாதாளத்தில் தள்ளி விடும். ஏமாற்றத்திற்கு உடன்பட வைக்கும். நவீனமயமாக மாறிவரும் சமுதாயத்தில் தற்போது உடன்பிறந்தோர், பெற்றோர், இனசனம் என்ற பாதுகாப்பு வட்டங்கள் உடைந்து கொண்டோ அருகிக் கொண்டோ வரும்போது ஒரு பெண் மனைவியாக, தாயாக தனித்து நிற்க் வேண்டி வரும் நிலை உண்டாகி விட்டது. இந்நிலையில் அவளுக்கு தனக்களிக்கப்பட்ட உரிமைகள் பற்றியும் அவற்றை எப்படிப் பெறலாம், அதற்குரிய சாதனங்கள் வழிமுறைகள் யாவை என்பன போன்ற விடயங்களை தொகுத்து இந்நூலில் தருகிறோம்.


இந்நூலில் அடங்கி இருக்கும் விடயங்கள் ஏற்கனவே பயிற்சி களங்களில் எடுத்து விளக்கப்பட்டவை. கிட்டத்தட்ட தெரிந்தெடுக்கப்பட்ட தலைமைத்துவப் பண்புகள் கொண்ட 175 பெண்களுக்கு அம்பாறை, திருகோணமலை, கண்டி, நாவலப்பிட்டிய, நுவரெலியா போன்ற இடங்களில் பயிற்றுவிக்கப்பட்டது. பின்பு

அவர்களில் மாவட்ட ரீதியில் 5 பெண்களாக திறமை மிக்க 25 பெண்களைத் தெரிந்தெடுத்து பயிற்றுவிக்கும் வழிமுறைகளை ஒரு நாள் பயிற்சி மூலம் அறிவுறுத்தி உள்ளோம். அவர்களுக்கு நாம் இட்ட பணி, அந்த ஒவ்வொருவரும் இச்சிறுநூல் தரும் உரிமைக் கோரிக்கைகளை நாம் புகட்டிய பயிற்சி வழிமூலம் 30 பெண்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்பதே. இந்த ரீதியில் 175+ 25x30 தமிழ்ப் பெண்களுக்கு சட்ட அறிவு புகட்டப்பட்டு விடும் என்பதே எமது குறிக்கோள். இதே மாதிரி சிறிது கூடிய அளவில் சிங்களப் பெண்களுக்கும் இத்திட்டம் வகுக்கப்பட்டது. இச் சிறுநூல் அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் ஏனையோரிற்கும் அவர்களது உபயோகத்திற்கென அளிக்கப்படும். இந்நூலை வெளிக்கொண்டுவருவதற்கு அயூப்கான், ரொக்கி ஆரியரட்ண, திலானி ராஜபக்ஷ, சுகந்தி கந்தசாமி ஆகியோர் உதவினர். சட்டத்தரணிகளாக இருக்கும் இவர்களே பயிற்சிகளையும் அளித்தனர். அவர்களது உழைப்பு மெச்சத்தக்கது. உணர்ச்சிபூர்வமாக, ஈடுபாட்டுடன் உழைத்த அவர்களுக்கு எமது நன்றிகள். சிங்களத்தில் எழுதப்பட்டது தமிழிலும் தமிழில் எழுதப்பட்டது சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. இந்நூலில் இறுதிப் பொறுப்பு திரு. தமிழ்மாறனைச் சென்றடைந்து எல்லா அத்தியாயங்களையும் வாசித்து பிழை திருத்தி செப்பம் செய்த பெருமை அவரையே சாரும். அவருக்கும் எம் நிறுவனத்தின் சார்பில் நன்றி செலுத்துகிறோம். எம்மை இந்த நற்பணியில் ஈடுபடச் செய்த சூத்திரதாரியாக வேறொருவர் உள்ளார். அது ஒரு நிறுவனம். European Commission For Human Rights எம்மை அணுகி மனித உரிமை சம்பந்தப்பட்ட ஒரு திட்டத்திற்கு தாம் உதவ விரும்புவதாகக் கூறினர். எங்களை இணைத்து வைத்தவர் CRM ஐச் சேர்ந்த சூர்யா விக்ரமசிங்க. இதில் எங்களுடன் தொடர்பு கொண்டு இப்பணியில் அதிக சிரத்தை எடுத்து பண உதவி செய்த European Human Rights Foundation ஐச் சேர்ந்த Micha Ramakers அவர்களுக்கும் சூர்யா விக்ரமசிங்க விற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அன்புடன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

**செல்வி திருச்சந்திரன்**
**பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்**
**58, தர்மராம வீதி**
**கொழும்பு-6.**

# ஆட்கள் சட்டம் பற்றிய ஓர் அறிமுகம்

## சட்டங்கள்



# ஆட்கள் பற்றிய சட்டத்துக்கு ஓர் அறிமுகம்

## அறிமுகம்

சட்டங்கள், அவற்றின் தன்மை, பயன்பாடு, அவை கையாளும் பரப்பளவு என்பவற்றின் அடிப்படையில் இரண்டு பிரதான பகுதிகளாக வகுக்கப்படலாம்.

அவையாவன (அ) பொருளளவிலான சட்டம்
(ஆ) நடபடி முறையிலான சட்டம்

பொருளளவிலான சட்டம் என்பது சட்ட நடவடிக்கை ஒன்றன் விளைவாக எழும் ஒரு நபரின் கடமைகள் உரிமைகள் கடப்பாடுகள் என்பவற்றை எடுத்துரைக்கும் கோவை ஆகும்.

உதாரணமாக ஆட்கள் சட்டம், ஆதனச் சட்டம், குற்றவியற் சட்டம், கடப்பாடுகள் சட்டம்.

மேற்கூறப்பட்ட பகுதியில் தனியார் சட்டம் (Private Law), பகிரங்கச் சட்டம் (Public Law) என்ற இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன. இங்கு தனிப்பட்ட சட்டம் என்ற வகையில் ஆட்கள் சட்டம், ஆதனச் சட்டம், ஒப்பந்தச் சட்டம் என்பவை முக்கியமானவை. ஆனால் நீதி நிர்வாகச் சட்டம், குற்றவியற் சட்டம் என்பவை பொதுச் சட்டங்கள் ஆகும். ஏனெனில் அவை சமூகத்தில் கடமைகள், உரிமைகள் பற்றி ஆராய்கின்றன.

நடபடி முறையிலான சட்டம் என்பது வழக்கம் நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கூறுவது.

உதாரணமாக குற்றவியல் + குடியியல் நடைமுறைக் கோவைகள், சான்றியல் சட்டம் என்பன. இவை முறையே குற்றவியல் குடியியல் வழக்குகளில் எடுக்க வேண்டிய படிமுறைகளின் விளக்கம் ஆகும்.

இந்த அடிப்படையில் நபர்கள் சட்டம் என்பது ஓர் பொருளளவிலான தனியார் சட்டம் ஆகும். இது தனிப்பட்ட நவீன வாழ்வில் முக்கிய நிகழ்வுகளான திருமணம், விவாகரத்து, பராமரிப்பு, பிள்ளைகளின் பாதுகாவல் என்பவற்றின் போது தனிமனிதனுக்கு ஏற்படும் கடமைகள் உரிமைகளை விளக்குகின்றது.

# பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம்

## 1. திருமணத்திற்கான வரைவிலக்கணம்

திருமணம் என்பது வெறுமனே சாதாரணமாக நபர்களிடையே செய்து கொள்ளப்படும் தனிப்பட்ட ஒப்பந்தம் போன்றதல்ல. இவ் ஒப்பந்தமானது ஓர் அந்தஸ்தினை உருவாக்குவதுடன் சமூகத்தில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. அது மட்டுமன்றி, இது இரு ஒத்த மன இசைவுகளிடையே செய்து கொள்ளப்படும் தன்னிச்சையான ஒப்பந்தம் ஒன்று ஆகும்.

## 2. திருமணத்துக்கான அறிமுகம்

திருமணம் என்ற விடயமானது எமது நீதித்துறையில் பல்வேறு சட்ட முறைமைகளின் செல்வாக்கைப் பெற்றுள்ள ஓர் அம்சம் ஆகும். அதாவது பிரதான அடிப்படை மூலமாக ரோமன் டச்சு சட்டக் கோட்பாடுகளுடன், இலங்கையின் மேற்படி கோட்பாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த ஆங்கில சட்டமும் இடைப் புகுந்துள்ளது. இவ்விரண்டு சட்ட முறைகளின் தொகுப்பாக விளங்குவதே எமது திருமணம் பற்றிய பொதுச் சட்டம் ஆகும்.

அதேவேளை வெவ்வேறு சமூகங்களின் பழக்கவழக்கங்களைப் பிரதிபலிக்கின்ற தேசவழமை முஸ்லீம் சட்டம் கண்டியச் சட்டம் என்பனவும் அந்தந்தச் சமூகத்தவருக்கு உரியன.

வலிதான ஓர் திருமணத்துக்கான தேவைப்பாடுகள் எமது பொது திருமணக் கட்டளை சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. மேற்படி சட்டம் வெளிப்படையாகவே 1870ஆம் ஆண்டின் கண்டிய திருமண விவாகரத்து சட்டத்தின் கீழ் ஆளப்படுவோரால் செய்து கொள்ளப்படும் திருமணங்களுக்கும் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் ஆளப்படுவோரால் செய்து கொள்ளப்படும் திருமணங்களுக்கும் ஏற்புடையதாக மாட்டாது, என வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் மேற்படி சட்டம் மறைமுகமாக கூறுவது என்னவெனில் கண்டிய, இஸ்லாமிய சட்டங்களினால் ஆளப்படுவோரைப் போலன்றி தேச வழமையால் ஆளப்படும் வட மாகாண தமிழ் மக்கள் இச்சட்டத்தின் ஆதிக்கத்தினுள் அடங்குவர் என்பதாகும்.

## 3. வலிதான திருமணத்தின் தேவைப்பாடுகள்

திருமணம் ஒன்று வலிதான சட்ட ரீதியான திருமணமாக அங்கீகரிக்கப் படுவதற்கு குறிப்பிட்ட சட்டத்தினால் முற்போடப்பட்ட தேவைப்பாடுகள் திருப்திப் படுத்தப்படுதல் வேண்டும்.

இதன் கீழ் திருமண வயது, திருமணம் செய்யும் தகுதியுடமை சட்டத்தின் கீழ் பின்பற்றப்பட வேண்டிய சில சம்பிரதாய முறைமைகள் என்பன இன்றியமையாதவை ஆகும்.

மேற்படி கூறப்பட்ட குறிப்பிட்ட / விசேட தேவைகளை விட வலிதான ஒரு திருமணத்துக்கு வேண்டிய சில பொதுவான தேவைப்பாடுகளும் உள்ளன. சாதாரணமாக ஓர் ஒப்பந்தத்துக்கு தேவையான காரணிகளான கட்சிக்காரர்களின் தன்னிச்சையான இசைவு, சித்த சுவாதீனமின்மை, மதுபோதை, பௌதீக ரீதியான நெருக்குதல் தவறு மோசடி போன்ற காரணிகள் இடம்பெற்றமைக்கான நிரூபணமாக இருப்பின், அது தன்னிச்சையாக கொடுக்கப்பட வேண்டிய பரஸ்பர சம்மதம் என்ற அம்சத்தை பாதித்து திருமணத்தை வலிதற்றது ஆக்கும்.

இவற்றைவிட மேலும் சில தேவைப்பாடுகள் மிக முக்கியமானவை. இவை கடைப்பிடிக்கப்படவில்லை என்பது நிரூபிக்கப்படும் போது, திருமணம் முற்று முழுதாக பயனற்றது / வெறிதானது ஆகும். உதாரணமாக முதலாவது வலிதான திருமணம் ஒன்று வலுவில் இருக்கும் போது செய்யப்படும் 2வது திருமணம், தடுக்கப்பட்ட உறவு முறை என்பன.

இவற்றை விட வேறு சில கூறப்பட்ட தேவைப்பாடுகள் அவற்றை பின்பற்றாமையானது திருமணத்தை முற்று முழுதாக வெற்றாக்காவிடினும் வெறிதாகக்கூடிய ஒன்றாக (voidable) உருவாக்குகின்றன.

உதாரணம்: கட்சிக்காரர் திருமண வயதை அடைந்திருப்பினும் கூட பராயமடையாமை, பெற்றோர் பாதுகாவலரது சம்மதம், பதிவு செய்யாமை என்பன.

## 4. திருமணத்தின் பிரதானமான உள்ளடக்கங்கள்

### (அ) வெற்றும் வெறிதுமான திருமணங்கள்:-

பொது திருமணக் கட்டளைச் சட்டம் பிரிவு 19இன் படி எந்த ஒரு திருமணமாவது இரண்டு தரப்பினரும் தெரிந்து கொண்டே வேண்டுமென்று மேற்படி கட்டளைச் சட்டத்தினால் வகுக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணாக அல்லது பிழையான பெயர் / பெயர்களில் (பிரிவு 40இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மரணப்படுக்கைத் திருமணங்கள் விதிவிலக்குப் பெற்றவை) முறையான அறிவிப்புக் கொடுத்தமைக்கான சான்றிதழ் இன்றி வேண்டுமென்றே தெரிந்து கொண்டு திருமணத்தை நடாத்துதல், திருமணம் செய்வதற்கு தகுதியற்றவர்களால் செய்யப்பட்டால் அத்திருமணம் வெற்றும் வெறிதும் ஆகும்.

### (ஆ) பிழையான ஆவணத்தின் அடிப்படையில் செய்துகொள்ளப்படும் திருமணம்:-

நியதிச் சட்டத்தினால் கூறப்பட்டுள்ள இத் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகாத திருமணங்கள் வெற்றும் வெறிதுமாகக் கருதப்படும்.

பிரிவு 46இன் படி பிழையான பெயர், அறிவிப்பு கொடுத்தமைக்கான சான்றிதழ் இன்றிய திருமணங்களை வெற்றும் வெறிதானவையும் எனக் கொள்ளப்படும்.

பிரிவு 47இன் படி, மற்றும்படி ஒரு வலிதான திருமணம் வேண்டுமென்றே பிழையாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு சான்றிதழ், பிரகடனத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருப்பின் அவையும் வெற்றானவையாகும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பிரிவு 46இன் கீழ் அத்திருமணம் வெற்றும் வெறிதுமான ஒன்றா எனத் தீர்மானிப்பதும், அன்றியும் அது வலிதாக இருப்பினும் பிரிவுகள் 47, 48இன் கீழ் கூறப்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையா என்பதை தீர்மானிப்பதும் கடினமான ஒரு வினாவாகும்.

## (இ) தடுக்கப்பட்ட திருமண வயது:-

எமது திருமண கட்டளைச் சட்டத்தின்படி ஆண் 16 வயது பெண் 12 வயது, ஐரோப்பிய / பறங்கிய இனப்பெண் ஆயின் 14 வயதுக்கு மேற்பட்டாலே யன்றி அவர்களிடையே செய்து கொள்ளப்படும் திருமணங்கள் வலிதற்றவை.

இவற்றுக்கு மேலதிகமாக நியதிச் சட்டமானது ஒரு பெண் 12 வயதை அடைந்திருப்பின் அது திருமணம் செய்யக்கூடிய ஒரு வயதாக இருந்தாலும் கூட (பராயமடையாதவர் ஆதலின்) தந்தையின் சம்மதம் அவசியமானது.

தந்தை இறந்திருப்பின் / சம்மதம் தெரிவிக்கக்கூடிய தகுதி அற்றவராயின் தாயாரும், அவருடைய இறப்பு, சுகவீனம் காரணமாகத் தகுதியற்றவராயின் சட்டரீதியான பாதுகாவலரால் சம்மதம் தெரிவிக்கப்படலாம்.

ஆயின் அண்மையில் பராயமடையும் வயது தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தம் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன்கீழ் ஆண் திருமணம் செய்யக்கூடிய குறைந்த பட்ச வயதெல்லை 18 ஆகவும் பெண் 16 ஆகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) தடுக்கப்பட்ட உறவு முறைகளிலான திருமணம்:-

திருமணக் கட்டளைச் சட்டப்படி கீழ்வரும் காரணிகள் பூர்த்தி செய்யப்பட்டாலேயன்றி எந்த ஒரு திருமணமும் வலிதல்ல:

1) இரண்டில் ஒரு திறம் ஒருவரிலிருந்து மற்றவர் நேரடி பின்னுரித்தாளராயின்;

2) அப்பெண் ஆணின் முழுமையான அல்லது பாதி இரத்த உறவுச் சகோதரியாக இருப்பின்; அவனுடைய சகோதரனின் / சகோதரியின் பாதி / முழுமையான இரத்த உறவு மகளாக இருப்பின் அல்லது இருவரில் ஒருவருடைய பின்னுரித்தாளராயின், அல்லது மனைவிக்கு வேறொரு கணவனின் மூலம் பிறந்த மகள் ஆயின் அல்லது அவனின் மகனின் / பேரனின் / தகப்பனின் விதவை ஆயின்;

3) அவ் ஆண் அப்பெண்ணுக்கு முழுமையான / பாதி இரத்த உறவு சகோதரனாயின் அல்லது அவனுடைய முழுமையான, பாதி இரத்த உறவு சகோதரனின் / சகோதரியின் மகன் ஆயின் அல்லது இருவரில் ஒருவரின் பின் உரித்தாளராயின், அவளுடைய கணவனுக்கு வேறொரு தாயின் மூலம் பிறந்த மகனாயின் அல்லது அவருடைய பிறந்த மகளின் / பேர்த்தியின் / தாயின் கணவனாயின்.

மேற்படி கூறப்பட்ட தடுக்கப்பட்ட உறவு முறைகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் திருமணம் / உடலுறவு தடுக்கப்பட்ட குற்றம் ஆகும். அத்துடன் 1 வருடத்துக்கு மேற்படாத சாதாரண / கடூழிய சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படக் கூடியதும் ஆகும்.

**(உ) இரண்டாவது திருமணம் செய்யக்கூடிய உரிமை:-**

பலதர மணம் என்பது பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாகவே தடை செய்யப்பட்டுள்ளது ஆகும். இதன் கீழ் பின்வருமாறு கூறப்படுகின்றது. "எந்த ஒரு திறமாவது முன்பு ஒரு திருமணம் செய்திருந்து அது சட்டத்தின் கீழ் குலைக்கப்பட்டால் அல்லது வெற்றானது எனப் பிரகடனப் படுத்தப்பட்டாலேயன்றி பின்னைய திருமணம் வலிதான ஒரு திருமணமல்ல".

இங்கு திருமணம் என்ற சொல் பின்வருமாறு பொருள் விளக்கம் செய்யப்படுகின்றது:

1870ஆம் ஆண்டின் கண்டிய திருமண கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்து கொள்ளப்பட்ட திருமணங்களும் கண்டிய விவாக, விவாகரத்து கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்து கொள்ளப்பட்ட திருமணங்களும், இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவர்களினால் செய்து கொள்ளப்படும் திருமணங்களும் தவிர்ந்த ஏனைய திருமணங்கள்.

மேலும் தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 362(B) யின் கீழ் எவராவது கணவன் / மனைவி உயிருடன் இருக்கும் போது செய்து கொள்ளப்படும் எந்த ஒரு பின்னைய திருமணமும் வெறிதானது என்பதுடன் 7 வருடத்துக்கு மேற்படாத இரண்டில் ஒரு வகையான சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படுவதுடன் தண்டப்பணமும் செலுத்த வேண்டியவர் ஆவார்.

**(ஊ) நியதிச் சட்டத்தின் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்காமை:-**

பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு திருமணத்துக்கான அறிவித்தல் (Notice of Marriage) அப் பகுதிக்குப் பொறுப்பான பதிவாளருக்கு கொடுக்கப்படல் வேண்டும். அல்லது அந்நபர் எம்மாவட்டத்தில் வசிக்கின்றாரோ, அம் மாவட்ட பதிவாளருக்கு கொடுக்கப்படல் வேண்டும்.

அறிவித்தல் பெயர், தேசியம், வயது, தொழில், சமூக அந்தஸ்து, வசிக்கும் இடம் என்பவற்றுடன் இரு தரப்பினரதும் தந்தையின் பெயர், பதவி, தொழில் என்பவையும் குறிப்பிடப்படல் வேண்டும். மேலும், சட்டத்தினால் யாருடைய எழுத்து மூலமான சம்மதம் தேவைப்படுத்தப்படுகின்றதோ, அவருடைய சம்மதமும் வழங்கப்படல் வேண்டும்.

- தரப்பினர்களிடையே சட்ட ரீதியான வலுவான திருமணத்தை செய்து கொள்ளும் எண்ணக்கருத்து (Intention to marry) இருத்தல் வேண்டும்.

- திருமணப் பதிவு (Registration)
  திருமண கட்டளைச் சட்டப்படி சகல திருமணங்களும் கட்டாயமாக பதிவு செய்யப்படல் வேண்டும் என்கிறது. ஆனால் பதிவு செய்யப்படாத சம்பிரதாய முறைப்படி செய்யப்படும் வழக்காற்றுத் திருமணங்களை அதன் வலிதுடைமையிலிருந்து தவிர்க்கப்படவில்லை.

ஆயினும் கண்டிய திருமணக் கட்டளைச் சட்டத்தில் காணப்படுகின்ற சிறந்த சான்று / Best Evidence என்ற சொற்பதமானது நீதிமன்றத் தீர்ப்புக்களில் பொருள் விளக்கம் செய்யப்பட்ட போது முதன்மையான சான்று எனத் திருமணப் பதிவை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் சம்பிரதாய வழக்காற்றுத் திருமணங்களை அனுமதிக்கப்படக்கூடிய சான்று (Admissible Evidence) என்று ஏற்கப்படுகின்றது.

# முஸ்லீம் சட்டத்தின் கீழான திருமணம்

திருமணம் பற்றி அறிஞர் "Mulla" / முல்லா என்பவரின் வரையறை பின்வருமாறு அமைகின்றது.

திருமணம் என்பது பிள்ளைகளை உற்பத்தி செய்து அவற்றை சட்டரீதியாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தம் ஆகும். இலங்கையில் இஸ்லாமிய திருமணமானது முஸ்லீம் திருமண, திருமண நீக்கற் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்றது.

இலங்கையில் இஸ்லாமிய திருமணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நியதிச் சட்டத் தேவைப்பாடுகளாவன:

## 1. திருமணப் பதிவு

பிரிவு (17) (1) முஸ்லீம் திருமண, திருமண நீக்கற் கட்டளைச் சட்டம் பின்வருமாறு கூறுகின்றது.

இச்சட்டம் அமுலுக்கு வந்தபின் முஸ்லிம்களிடையே செய்து கொள்ளப்படும் திருமணம் எதுவும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அத்துடன் தொடர்ந்து 'நிக்கத்' என்ற சடங்கும் நடாத்தப்படலும் வேண்டும்.

நிக்கத் என்பது குரானில் கூறப்பட்டுள்ள சில வாசகங்களை உச்சரிப்பதன் மூலம் செய்யப்படும் ஓர் உறுதிமொழி ஆகும். ஆயினும் இதற்கென குறிப்பிட்ட வடிவத்திலான ஒரு சடங்கு அவசியமற்றது. இங்கு உச்சரிக்கப்படும் பிரேரணையைக் குறிக்கும் சொற்களுக்கு வழங்கப்படும் சம்மதமானது, அக்கணத்திலிருந்து அத்தரப்பினரை திருமண உறவில் ஈடுபடுவதற்கான எண்ணக்கருத்தை வெளிப்படுத்துவதாகக் கருதப்படும்.

இலங்கையில் உள்ள வழமையானது இஸ்லாமிய திருமணப் பதிவாளரே மேற்குறிப்பிட்ட நிக்கத் சடங்கை நடாத்தி வைப்பவர் ஆவார். இங்கு அவரால் கற்பிக்கப்படும் சில குரான் வாசகங்களை தரப்பினர், ஒருவர் முன்னிலையில்

மற்றவர் (சாட்சிகளின் முன்னிலையில்) உச்சரிப்பதன் மூலம் இச்சடங்கு நிறைவேற்றப்படும். மேலும் இதற்கு முன்பு தேவையான படிவத்தில் திருமணப் பதிவு செய்தலும் அவசியமானது.

பிரிவு 17 (2) இன் படி இவ்வகையான திருமணத்தில் அதனைப் பதிவு செய்விக்க வேண்டிய பொறுப்பு பின்வருவோரைச் சாரும்.

(1) மணமகன்

(2) மணமகளின் வளி (vali)

(3) திருமணத்துடன் தொடர்புடைய 'நிக்கத்' சடங்கை நிறைவேற்றியவர்.

## 2. திருமணம் செய்யக்கூடிய தகுதி யாருக்குள்ளது?

பின்வருவோருக்கிடையே செய்து கொள்ளப்படும் திருமணம் வலிதானது.

அ) ஆண் ஆயின் பராயமடைந்தவராக இருப்பதுடன், சித்தசுவாதீனம் உள்ளவராகவும் இருத்தல்.

ஆ) சபி (shafi) பிரிவைச் சேர்ந்த பெண்ணைப் பொறுத்தவரை, அவள் பருவவயது, பராய வயது என்பவற்றை அடைந்தாலென்ன, அல்லாவிடிலென்ன உடலுறவு மேற்கொள்ளக்கூடிய ஓர் பெண் ஆயின்.

இ) ஹனாபி (Hanafi) பிரிவைச் சேர்ந்த பெண்ணாயின் பருவ வயதினை அடைந்தவளாக இருப்பதுடன் அவள் தன் விருப்பத்தின் பேரில் ஒரு வளியை (vali) நியமித்தல் வேண்டும்.

## 3. தரப்பினர்களின் சம்மதம்

திருமணத்துக்கான தரப்பினர்களின் சம்மதம் அவர்களினால் கொடுக்கப் படலாம் / அவர்களால் நியமிக்கப்பட்ட முகவர் / பிரதிநிதிகள் மூலம் கொடுக்கப்படலாம்.

## 4. திருமணத்துக்கான தடைகள்

*(அ) தடுக்கப்பட்ட உறவுகள்*

ஒரு முஸ்லீம் பின்வரும் உறவுகளில் உள்ளோரை, அவர்களிடையே பாலியல் உடலுறவு இருப்பினும் கூட திருமணம் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்:

a) அவனின் தாய் / தாயாரின் தாயார் எவ்வளவு உயர்ந்தவராயினும்;
b) அவனின் மகள், மகளின் மகள் எவ்வளவு சிறியவராயினும்;
c) அவனுடைய சகோதரி (நேரடி / அரை இரத்த உறவு கொண்டவரேயானாலும்);
d) அவனின் சகோதரன் / சகோதரியின் மகள் எவ்வளவு சிறியவரானாலும்;
e) அவனின் மாமி, மாமியின் மாமி (தாய்வழி / தந்தைவழி எவ்வாறாயினும்).

பிரிவு 80 (1) (2) இஸ்லாமிய திருமண கட்டளை சட்டம் மேற்படி தடைகளை விதித்திருப்பதுடன் அவற்றுக்கு தண்டனையையும் விதித்துள்ளது.

a) அவனின் மகள் / ஏனைய பின்னுறுவோர்
b) தாய் / ஏனைய வயதில் குறைந்த பின்னுறுவோர்
c) அவனின் முழுமையான அல்லது அரை இரத்த உறவில் உள்ள சகோதரி
d) சகோதரன் / சகோதரியின் முழுமையான / அரை இரத்த உறவு மகள் / அவர்கள் இருவரில் ஒருவரின் பின்னுறுவோர்
e) அவனுடைய தாய் / தந்தையின் முழு / பாதி இரத்த உறவு நிலையிலுள்ள சகோதரி / அவர்களின் பின்னுறுவோர்
f) அவனுடைய மனைவியின் தாயார் / தாயின் தாயார்
g) தனது மனைவிக்கு பிறிதொரு கணவனின் மூலம் பிறந்த பிள்ளை / பேரப்பிள்ளை
h) அவனுடைய மகனின், பேரனின், தந்தையின், தந்தையின் தந்தையின் மனைவி / விதவை / விவாகரத்து செய்யப்பட்ட மனைவி
i) அவனுடைய மனைவியின் சகோதரி (அவனுடைய மனைவி வாழ்ந்து கொண்டிருக்கும் போது)

என்பவை குற்றம் ஆகும், என்பதுடன் இரண்டில் ஒரு வகையான சிறைத் தண்டனையால் 3 வருடத்துக்கு மேற்படாமல் தண்டிக்கப்படக் கூடியதும் ஆகும்.

*(ஆ) எண்ணிக்கை* (Number)

ஓர் இஸ்லாமிய ஆண் 4இற்கு மேற்படாத எண்ணிக்கையுடைய பெண்களைத் திருமணம் செய்யலாம். ஆனால் பெண்ணைப் பொறுத்தவரை ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் மட்டுமே. இத்தடையானது குரானில் இருந்து எடுக்கப்பட்டது ஆகும்.

*(இ) சமயம்* (Religion)

ஒரு முஸ்லீம் ஆண் பிறிதொரு மத நம்பிக்கையுள்ள பெண்ணைத் திருமணம் செய்யலாம். ஆயின் அந்தப் பெண் பின்பற்றும் மதமானது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதுடன் ஒரு திருமறையில் விசுவாசம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக ஆபிரகாம் என்ற நூல்.

ஓர் இஸ்லாமிய ஆண் ஒரு கிறீஸ்தவ / யூத இனப் பெண்ணை மணம் செய்யலாம். மேற்படி அனுமதியானது வழங்கப்பட்டதன் அடிப்படை அந்த மதமானது உருவ வணக்கத்தை மேற்கொண்டிருக்கக் கூடாது என்பதாகும்.

கிறீஸ்தவர்களுக்கும் மேலதிகமாக ஒரு புனிதமான நூலில் நம்பிக்கை வைத்துள்ள பெண்ணைத் திருமணம் செய்து, அதன் விசுவாசத்தையே அவள் தொடர்ந்தும் மேற்கொண்டிருப்பினும் அது அனுமதிக்கக் கூடியது.

*(ஈ) பரம்பரை உறவு நிலை* (Consanguinity)

ஓர் இஸ்லாமிய ஆண் / பெண் ஒருவருடைய இரத்த உறவினரை மற்றவர் மணம் செய்து கொள்ளுவது சட்ட ரீதியற்றதாகும்.

1. ஒருவரின் சொந்த முன்னுறுவோர் எவ்வளவு எவ்வளவு மூத்தவரானாலும்;
2. ஒருவரின் சொந்தப் பின்னுறுவோர் அவனைவிட எவ்வளவு வயது குறைந்தவராயினும்;
3. ஒருவனுடைய தந்தை / தாயின் பின்னுறுவோர் எவ்வளவு வயதில் குறைந்தவரானாலும்;
4. யாராவது பின்னுறுவோரின் சகோதரன் / சகோதரி எவ்வளவு வயதில் மூத்தவராயினும்.

மேற்படி உறவு நிலையில் உள்ளவர்களிடையே செய்து கொள்ளப்படும் திருமணம் சட்ட ரீதியற்றது என்பதுடன் வெறிதானதும் ஆகும்.

இதன் மூலமான தடையானது சட்ட ரீதியான திருமணத்தின் மூலமான பிறப்புக்களால் வருவோருக்கு மட்டுமன்றி சோர உறவு மூலமான பிறப்புக்களுக்கும் ஏற்புடையது. இங்கு கடைசியாக பெயரிடப்பட்ட தடையானது பெண்களுக்கு மட்டுமே பொருந்தும்.

*(உ) <u>பிறப்பினால் உண்டாகும் உறவு</u>*

ஓர் உறவு முஸ்லிம் பின்வருவோரை மணந்தால் அது சட்ட ரீதியற்றதாகக் கருதப்படும். அவையாவன:

(1) அவனுடைய மனைவியின் தாயார், அத்தாயாரின் தாயார் எவ்வளவு இளையவராயினும் கூட;

(2) மகனின் மனைவி, மகன்களின் மனைவியர், மகளின் மகள் எவ்வளவு வயதில் குறைந்தவராயினும்;

(3) அவனுடைய தந்தையின் மனைவி (தாய்வழி / தந்தைவழி) எவ்வளவு வயதில் மூத்தவராயினும் 80 (1) – (7) மற்றும் 80 (2) பிரிவின் கீழ் தவிர்க்கப்படும் தடைகளுக்கு உட்பட்டிருப்பின் / தொடர்புபட்டிருப்பின் தண்டிக்கப்படக் கூடியவை ஆகும்.

(4) வளர்ப்பு உறவு (Fostorage).

## முகமதியன் சட்ட நாளேட்டின் படி

"வளர்ப்புப் பெற்றோரும் இயற்கையான / மகவேற்பு முறையிலான முன்னுரித்தாளர்களும் பின்னுரித்தாளர்களும் திருமணம் செய்யத் தடுக்கப்பட்டோராவர். எனவே ஒரு தாதியானவள் ஏற்கனவே பிறந்த பிள்ளையொன்றுக்கு மருத்துவ உதவி செய்துவிட்டு அதே நபரின் வேறொரு குழந்தைக்கு / வேறு ஒரு நபரின் குழந்தைக்கு மருத்துவம் செய்தாலும் அவள் மருத்துவ உதவி செய்த

அனைத்து குழந்தைகளும் முதலாவது தம்பதியினரின் இணைப்பில் உருவான குழந்தைகளைப் போன்று அதாவது சகோதரன் சகோதரி என்ற உறவு நிலையிலேயே விளங்குவர்".

### *(அ) சட்ட முறை இணைப்புக்கள்* (Unlawful Conjunction)

ஒரு முஸ்லிம் ஆண், ஒரு தடவையிலோ / ஒரே நேரத்திலோ உறவுடைய 2 பெண்களை மணம் செய்ய முடியாது. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக, இரண்டு சகோதரிகளை, மாமியும் மருமகளுமான பெண்களை மணக்கக் கூடாது. ஒரு ஆண் தனது மனைவி உயிருடன் இருக்கும் பொழுது, மனைவியின் சகோத்ரியைத் திருமணம் செய்யக் கூடாது.

இஸ்லாமிய திருமண, திருமண நீக்கற் கட்டளைச் சட்டப் பிரிவுகள் 80(1), (11) என்பனவும் இதே தத்துவத்தையே குறிப்பிட்டு அவற்றை தண்டனைக்குரிய குற்றங்களாகவே குறிப்பிடுகின்றன.

அதே போன்றே ஒரு முஸ்லிம் பெண், ஒன்றுக்கு மேற்பட்ட கணவனை திருமணம் செய்ய முடியாது.

முஸ்லிம் சட்டத்தின் கீழ் மேலே கூறப்பட்ட சட்ட ரீதியற்ற உறவு முறை இணைப்புக்களின் மூலமான திருமணங்கள் சட்ட ரீதியாக கருதப்படுவதுடன் வெறிதானவையும் ஆகும்.

### *(ஆ) இடற்* (Iddat)

"இடற் அனுசரித்தல்" என்பது மீளவும் திருமணம் செய்வதினின்றும் தவிர்ந்திருப்பதுடன், கணவனுடைய இறப்பு, திருமணம் கலைக்கப்படல் போன்ற காரணங்களினால் திருமணம் இல்லாது ஆக்கப்படுவதன் காரணமாக ஏற்படுத்தப்படும் ஒரு தடை ஆகும். இடற் அனுட்டிப்பதன் உண்மையான நோக்கம் என்னவெனில் அவளின் கர்ப்பப்பையின் நிலையை அறிவதற்காகும். அதாவது அவள் கர்ப்பமானவளா என்பது தொடர்பில். அவ்வாறு அவள் கர்ப்பிணியாக இருப்பின் அந்த இடற் காலப் பகுதியானது அவள் குழந்தையைப் பிரசவிக்கும் வரை தொடரும்.

மேற்படி தடையின் காரணத்தினால் கணவன் கூட 4வது மனைவியின் இடற் காலம் முடிவடையும் வரை அல்லது அவர்களுள் ஒருவரை விவாகரத்து செய்யும் வரை 5வது மனைவியை மீளவும் திருமணம் செய்ய முடியாது.

## கண்டியச் சட்டத்தின் கீழான திருமணம்

கண்டியச் சட்டத்தின் கீழான திருமணம் தற்போது நியதிச் சட்டங்களின் கீழான திருமணங்கள் ஆயினும் மனைவியின் நிலைமை அங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. கணவனின் மறைவுக்குப் பின்பு அவனுடைய ஆதனத்தில் பொருளளவிலான உரிமை கொள்வதினாலும் மற்றும் உண்மையில் உயர்ந்த சாதி அந்தஸ்தில் உள்ளவர்கள் திருமணம் தொடர்பில் ஏற்படக் கூடிய கலப்புக்களினை கட்டுப்படுத்துவதினாலும் அச் சந்தர்ப்பங்கள் அக் குடும்பத்தின் கௌரவத்துடன் தொடர்புடைய விடயம் என்பதனாலும் இது முக்கியம் பெற்ற ஒன்றாக காணப்படுகின்றது. ஆயினும் கூட இவ்விடயம் பற்றிய அண்மைய சட்டவாக்கம் வரையில் பராமரிப்பு திருமணம், மணப்பிரிவினை என்பவை தொடர்பிலான பிரச்சனைகளைத் தீர்மானிப்பதில் ஒரு தெளிவற்ற நிலைமையே காணப்பட்டது.

<u>சட்ட ரீதியான, வலிதான திருமணம் ஒன்றின் தேவைப்பாடுகள்:</u>

1. தரப்பினர்கள் இருவரும் ஒரே சாதியில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்;
2. அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் இருக்கக் கூடாது;
3. உறுதியான திருமண உறவினால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் எண்ணத்துடன் இணைந்து வாழ்தல் வேண்டும் (பிரதான தேவைப்பாடுகள்);
4. பெற்றோர், உறவினர்களின் சம்மதம் கொடுக்கப்படுதல் வேண்டும்;
5. பெரும் அகதியாயின், தலைவர்கள் ஆகியோருக்கிடையிலான திருமணமாயின் அரசனின் சம்மதம் கொடுக்கப்படல் வேண்டும் (இரண்டாந்தரத் தேவைப்பாடுகள்).

## 1. ஒத்த சாதி இணைப்பு (Connubium)

மேற்படி (Connubium) கொனூபியம் என்ற இணைப்பானது ரோமன் சட்ட அடிப்படைக் கருத்தாகும். இலகு மொழியில் இதனைக் கூறுவதானால் தரப்பினர்கள் ஒத்த சாதியினராக இருத்தல் வேண்டும் என்பதாகும். விரிவான அடிப்படையில் கூறுவதானால் வேறுபட்ட சாதியினருக்கிடையே / ஒரு சாதியினரின் வேறுபட்ட தகுதியினருக்கிடையே திருமணம் செய்வது தெளிவாகத் தடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடலாம்.

மேலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலேனும் 'கொவியா' (goviya) 'படுவா' (paduwa) இனங்களுக்கிடையே செய்யப்படும் திருமணம் அங்கீகரிக்கப்படமாட்டாது. அவ்வாறு செய்ய முற்படும் ஆண் ஒருவர் நீதிவானால் தண்டிக்கப்படுவார்.

அதைப்போன்றே ஒரு பெண்ணுக்கும் ஏற்புடைய விதியாக, அவள் தனது தகுதியிலும் பார்க்க சிறிது குறைந்த ஒருவனை திருமணம் செய்தலும் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் ஆகும்.

1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க கண்டிய திருமண, விவாகரத்துச் சட்டம் மேற்படி ஒத்த சாதி என்ற தேவைப்பாட்டை உட்கிடையாக நீக்கியுள்ளது. அச் சட்டமானது எதிர்கால திருமணங்கள் தொடர்பில் சாதி / சமமான சமூக அந்தஸ்து / தகுதி பற்றி எவ்விதமான குறிப்பீட்டையும் செய்யவில்லை. ஆயின் திருமணங்கள் அவற்றை ஆளும் சட்டங்கள், நடைமுறைகள், அச்சமயத்தில் கண்டியரிடையே நிலவுகின்ற வழக்கங்கள் என்பவற்றுக்கேற்ப செய்யப்படுமாயின் அவை வலிதானவை என விளம்பப்படும் எனக் குறிப்பிடுகின்றது. ஆயின் நடைமுறையில் சாதி பற்றிய நடைமுறைகளை உடைக்கும் மரபு இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் குறைவாகவே காணப்படுகின்றது.

## 2. தடுக்கப்பட்ட உறவு முறை நிலைகள்

சிங்கள உறவு முறையிலுள்ள பொதுவான நோக்கமாக தரப்பினர்களிடையே கிட்டிய உறவு முறை இருப்பின் திருமணம் செய்ய முடியாது என்பதாகும். ஆயினும் கூட முதல் மைத்துனர், அதாவது சகோதரன் / சகோதரியின் பிள்ளைகளை திருமணம் செய்யலாம். இது தொடர்பான விடயத்தை மேலும் ஆராய்வுக்கு உட்படுத்த வேண்டியிருப்பின் கிட்டிய உறவு முறை என்றால் என்ன என்பது எங்கும் விளக்கப்படவில்லை.

"நீதி நிகண்டு" பின்வரும் சில உதாரணங்களைத் தருகின்றது:

1) ஒரு ஆண் தனது தந்தைவழிப் பாட்டனின் சகோதரனின் மகளைத் திருமணம் செய்ய முடியாது.

2) ஒரு ஆண் தனது மைத்துனனின் தந்தைவழி மாமனுடைய மனைவியை திருமணம் செய்ய முடியாது.

3) ஒரு பெண் தனது தந்தைவழிப் பாட்டியின் சகோதரனின் மனைவியரின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்ய முடியாது.

4) ஒரு பெண் தனது மாற்றான் தந்தையின் (தாயின் இரண்டாந்தாரக் கணவன்) மச்சானை (மைத்துனன்) திருமணம் செய்யலாம்.

5) ஆண் தனது தந்தைவழி மாமியின் பேத்தியினை திருமணம் செய்யலாம் ஆயின் அவன் ஏற்கனவே அவளுடைய மகளைத் திருமணம் செய்திருக்கக் கூடாது.

## எண்ணம்

உறுதியான திருமணக் கடப்பாட்டில் பிணித்துக் கொள்ளும் வலுவான எண்ணம் மிக முக்கியமானது. ஆயின் இவ்வம்சம் அந்தந்த வழக்குகளின் சூழ்நிலையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். வழமையான திருமணச் சடங்குகளை கடைப்பிடித்தலானது போதிய ஓர் எண்பிப்பு ஆகும். மேலும் எந்தவித சடங்கு சம்பிரதாயங்களுமின்றி தொடர்ச்சியான உடலுறவு (சமமான சாதியினரிடையே), ஆணினாலோ அல்லது அவன் சார்ந்துள்ள குடும்பத்தினாலோ வன்மையான செயல் எதுவும் செய்யாதிருத்தல் என்பன சட்டமுறையான திருமணமாகக் கருதப்படும்.

ஒரே சமமான சமூக அந்தஸ்திலுள்ள ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்ந்தால் அது கண்டியச் சட்டத்தைப் பொறுத்தவரையில் திருமணம் உண்டு என்று நிறுவுவதற்கும் அவர்களின் பிள்ளைகள் பெற்றோரின் வழியுரிமையை பெறுவதற்கும் வழி செய்யும். அவர்களுடைய பெற்றோர் ஒழுங்கான திருமண அமைப்பின் கீழ் இணையாவிடினும் கூட இது வலிதான நடைமுறையாகும்.

பலதாரமணம், பெண் பல கணவர்களுடன் வாழ்தல், திருமணத்துக்கு அப்பாற்பட்ட உடலுறவு என்பனவும் வலிதானவையே. எனினும் அங்கு கணிசமான, ஒரு தெளிவின்மையாக, எச்சந்தர்ப்பத்திலிருந்து சடங்கு முறைகளற்ற இத் திருமணம் வலிதாகக் கொள்ளப்படுகின்றது என்பது தெளிவற்ற ஒரு நிலையாகும்.

## 3. பெற்றோர் உறவினர்களின் சம்மதம்

உயர்ந்த அந்தஸ்திலுள்ள மக்களிடையே பொதுவாக பெற்றோராலேயே திருமணங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அத்தகைய சகல சந்தர்ப்பங்களிலும் பெற்றோர், உறவினர்கள் ஆகியோரின் இணக்கம் ஓர் அவசியமான நிபந்தனையாகும். இங்கு சம்மதம் என்ற கருத்தேற்பின் முக்கியத்துவமானது பெண் தொடர்பிலும், ஆண் தொடர்பிலும் வேறுபடுகின்றது. இங்கு முதலாவது வகையைப் பொறுத்தவரையில் முழுமையாக பெற்றோரின் சம்மதம் அல்லது அவர்களின் இறப்பின் பின்னர் கிட்டிய ஆண் உறவினர்களின் சம்மதம் இன்றியமையாதது. அவர்கள் தம்மால் அங்கீகரிக்கப்படாத ஒரு திருமணத்திலிருந்து அவளைப் பிரிக்கவும் முடியும். ஆனால் பெற்றோரின் இறப்பின் பின்பு சகோதரர்கள், உறவினர்கள் அப்பெண்ணுக்கு ஒரு கணவனை தெரிவு செய்து கொடுக்காமல் அசட்டை செய்தால், அப்பெண் தனக்கேற்ற ஒரு கணவனைத் தேர்வு செய்யும் உரிமை உள்ளவள் ஆவாள்.

ஆண்களைப் பொறுத்தவரையில் பெருமளவு சுதந்திரம் இது விடயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அவர்கள் குறிப்பிட்ட ஒரு வயது வந்ததும், பெற்றோர் இறப்பினும் கூட அவ் ஆண் சட்ட ரீதியான சமமான சாதியில் உள்ள ஒரு பெண்ணை / குறைந்த தகுதியிலுள்ள ஒரு பெண்ணைக் கூட அவர்களின் சம்மதமின்றி அல்லது சம்மதத்துக்கு எதிராகத் திருமணம் செய்யலாம்.

1870ஆம் ஆண்டு 3ஆம் இலக்கக் கட்டளைச் சட்டமும் அதனைத் தொடர்ந்து வந்த 1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கச் சட்டமும் பராயமடையாதவர்களைப் பொறுத்தவரையில் பெற்றோர் / பாதுகாவலரின் சம்மதத்தை தேவைப்படுத்துகின்றது. ஆயின் முறையாகப் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு திருமணமும் மேற்படி சம்மதமின்மை என்ற ஏணப்பின் பேரில் பின்னர் வலிதற்றதாக்கப்பட முடியும்.

## அரசனின் இணக்கம்

சிங்கள அரசர்கள் பின்னைய காலங்களில் சகல சந்தர்ப்பங்களிலும் தமது அதிகாரிகள் தலைவர்களின் திருமணங்களில் கட்டுப்பாடு அதிகாரத்தைப் பிரயோகித்தனர். இங்கு மேற்படி தலையீடானது நிலமானிய பிரபுத்துவ முறைமையினால் ஏற்பட்ட ஒன்றா அல்லது முழுமையான, அரசனின் அதிகாரத்தின் ஒரு வெளிப்பாடா என்பது தெளிவில்லை.

ஆயினும் தற்போதைய அரசாங்கம் சட்டவாக்கத்தில் மேற்படி அம்சத்தைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

## கண்டியத் திருமண, விவாகரத்துச் சட்டம்

கண்டிய மாகாணங்களுக்கென விசேடமான ஒரு சட்டமாக 1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க கண்டிய திருமண, விவாகரத்துச் சட்டம் இயற்றப்பட்டது. தற்போதைய சட்டமானது 1870ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நியதிச் சட்டத்தினால் ஆளப்படுகின்றது. இதன் கீழ் வலிதான திருமணத்தின் தேவைப்பாடுகள் பின்வருமாறு:

(1) திறத்தவர் திருமணம் புரியக்கூடிய வயதுடையவர்களாக இருத்தல்-

பொதுவாக ஆண்களுக்கு 16 வயதும் பெண்களுக்கு 12 வயதும் திருமணம் புரியக்கூடிய குறைந்தபட்ச வயதெல்லையாகும். ஆனால் மேற்படி வயது வந்து 1 வருடத்தின் பின்பு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு திருமணமும் வயதடையாமை என்ற ஏதுவின் அடிப்படையில் வலிதற்றதாக்கப்பட மாட்டாது. அந்த வயதின் பின்பு தரப்பினர் ஒன்றாக இணைந்து வாழ்ந்தாலும் அல்லது அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தாலும் கூட அது வலிதான ஒன்றாகவே கொள்ளப்படும்.

(2) ஓர் ஆண் 18 வயதுக்கு குறைந்தவராகவும் திருமணம் புரியாதவராகவும் இருக்கும் போதும் அல்லது ஒரு பெண் 16 வயதுக்கு குறைந்து திருமணம் புரியாதவளாகவும் இருக்கும் போதும் இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் அந்த ஆண் / பெண் திருமணம் செய்வதற்கு தந்தையின் சம்மதம் பெற்றுக்

கொள்ளப்படல் வேண்டும். அவர் படுக்கையிலிருப்பின் தாயார் அல்லது இருவரும் இறந்திருப்பின் பாதுகாவலன் / பாதுகாவலர்களும் சம்மதம் கொடுக்கலாம். பெற்றோர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் / நல்ல காரணமின்றி தமது சம்மதத்தை வழங்க மறுப்பின் மாகாணப் பதிவாளரின் இணக்கம் போதுமானது.

(3) கட்சிக்காரர்கள் திருமணத்திற்கு தடை செய்யப்பட்ட உறவு முறையிலுள்ள வர்களாக இருக்கக் கூடாது.

(4) இரண்டு தரப்பினரும், ஒருவர் உயிருடன் இருக்கும் போது மற்றவர் சட்ட ரீதியான வாழ்க்கைத் துணையை வைத்திருக்க முடியாது.

(5) திருமணமானது அம்மாவட்டப் பதிவாளரினால் பதிவு செய்யப்படல் வேண்டும்.

மேலும் பதிவாளரால் கோரப்பட்டதற்கிணங்க 7 நாட்களுக்குள், நடைபெறவுள்ள திருமணம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

## கண்டிய திருமண, விவாகரத்துச் சட்டத்தின் ஏற்புடைமை

1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கச் சட்டம் "கண்டிய மாகாண வாசிகளுக்கிடையே" நடைபெறும் திருமணங்களுக்கு ஏற்புடையதாகும். அன்றேல்,

1) இக்கட்டளைச் சட்டம் அமுலில் இருக்கும் போது கரையோர மாகாணங்களில் செய்யப்படும் திருமணங்கள்.
2) இரண்டில் ஒரு திறம் ஐரோப்பியர் / பறங்கியர் எனின்
3) முகமதிய நம்பிக்கை / விசுவாசம் கொண்ட நபர்களிடையிலான திருமணங்களுக்கு இச்சட்டம் செல்லுபடியாகாது.

## திருமணங்களின் வகைகள்:

கண்டிய மாகாணங்களில் 2 வேறுபட்ட வடிவங்களைக் கொண்ட திருமணங்கள் அமுலில் இருக்கின்றன.

அவை முறையே :-

1) டீக திருமணம் (Diga)

2) பின்ன திருமணம் (Binna)

டீக திருமண முறைமை அங்கு வழமையானதும் மற்றும் தந்தைவழி உறவு முறைக்கு வலுக்கொடுக்கும் ஓர் அம்சமாகவும் காணப்படுகின்றது. இங்கு கணவன் தனது மணப்பெண்ணை தனது சொந்த இல்லத்துக்கோ அல்லது தனது பெற்றோரின் இல்லத்துக்கோ அழைத்துச் செல்வதுடன் திருமணம் வலுவில் இருக்கும் காலம் வரையில் அவள் அக்குடும்பத்தின் ஓர் உறுப்பினராகவே கருதப்படுவாள்.

பின்ன முறையிலான திருமணம் மிகப் பழமையான ஒரு வடிவம் ஆகும். இங்கு கணவன் மனைவியின் இல்லத்துக்கோ / அவளுடைய உறவினர்களின் இல்லத்துக்கோ கொண்டுவரப்படுவதுடன் முக்கிய அம்சம் வசிக்கும் ஆதனம் மனைவிக்கு / மனைவியின் குடும்பத்துக்கு உடைமையானது ஆகும், மனைவியின் தந்தையுடைய ஆதனமாக இருக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல எனினும் கணவன் இத்திருமணத்தின் மூலம் கீழான / மனைவிக்கு அடுத்த இரண்டாந்தர நிலைய்யயே வகிக்கிறார். அவர் எந்த நேரமும் மனைவியினால் அல்லது அவளுடைய பெற்றோரால் அல்லது பெற்றோரின் இறப்பின் பின்னர் சகோதரர்களால் செய்து வைக்கப்பட்ட திருமணம் ஆயின் சகோதரர்களாலோ வெளியேற்றப்படுவதற்கு இலக்காகலாம்.

ஆனால் திருமணம் மணமகளின் பெற்றோரால் ஒழுங்கு செய்யப்பட்டதாயின் அவர்களுடைய மறைவின் பின்னர் மனைவியின் சம்மதமின்றி அத்திருமணத்தைக் கலைக்க முடியாது.

பிள்ளைகள் மனைவியின் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதுடன் தாயாரின் முதற் பெயரிலேயே இயங்குவர். தற்போதைய நவீன காலங்களில் மணமகள் வாரிசற்றவளாயின் மட்டுமே மேற்படி திருமண முறை மேற்கொள்ளப்படுகின்றது.

திருமணத்தை பதிவு செய்தலானது ஒரு போதும் அதன் வகையை காண்பிப்பதற்கான ஒரு சான்றாக மாட்டாது. திருமணம் 'டீக' எனப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் கூட அது பின்னவாக மாற்றமடையலாம்.

பதிவாளரிடம் திருமணத்தின் தன்மை பதியப்படாவிடின் அதற்கு எதிரான கருத்துக்கள் நிறுவப்படும் வரையில் அது 'டீக' திருமணம் என்றே ஊகிக்கப்படும்.

# பொதுச் சட்டத்தின் கீழ் விவாகரத்துப் பற்றிய கோட்பாடு

## அறிமுகம்

'விவாகரத்து' என்ற கோட்பாடானது உண்மையில் வலிதான திருமணம் என்ற அடிப்படை எண்ணக்கருவில் தங்கியுள்ள ஒன்று ஆகும். தரப்பினர்களிடையே வலிதான திருமணம் என்ற ஒன்று இடம்பெற்றிருக்காதவிடத்து விவாகரத்து என்ற வினா எழமாட்டாது.

எனவே, எந்த ஒரு கட்சியினராவது நீதிமன்றத்திடமிருந்து மணப் பிரிவினைக்கான கட்டளையைப் பெற வேண்டுமாயின் அவர்கள் முதலில் தமக்கிடையே சட்ட ரீதியான வலிதான திருமணம் நிலவுகின்றது என்பதை நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் நிறுவுதல் வேண்டும்.

'விவாகரத்து' என்றால் சட்ட ரீதியாக வலிதாக இருக்கும் திருமணம் ஒன்றை முடிவுக்குக் கொண்டுவரும் ஒரு செயன்முறை ஆகும்.

இலங்கையில் விவாகரத்து தொடர்பான சட்டங்கள் பல்வேறு சட்ட முறைமைகளின் செல்வாக்கினைப் பெற்று திரிபடைந்த நிலையிலே காணப்படுகின்றன. அதாவது பொது திருமண, விவாகரத்துச் சட்டம் என்பது ரோமன்டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், உள்ளூர் நியதிச் சட்டவாக்கங்கள் மற்றும் வழக்காற்றுச் சட்டங்கள் என்பவற்றின் கலப்பினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.

பொதுச் சட்டமானது இலங்கையில் பெரும்பான்மையான மக்களை ஆளும் சட்டமாகும். கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம் என்பவை ஏற்புடையதாகும் மக்களைத் தவிர ஏனையோர் தேசவழமையால் ஆளப்படுவர். இவர்கள் பொது திருமண, விவாகரத்து கட்டளைச் சட்டத்தினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றனர். எனவே, இவ்வாறு பொது திருமண, விவாகரத்துக் கட்டளைச் சட்டம் ரோமன் டச்சுச் சட்ட, ஆங்கிலச் சட்ட முறைமைகளின் செல்வாக்கினைக் கொண்டிருப் பதனால் இலங்கையின் திருமணஞ்சார் உறவு முறைகளின் விடயத்தில் பாரிய விளைவுகள் ஏற்படுத்தியுள்ளன.

பொது சட்டத்தின் கீழ் மண நீக்கம் என்பது விவாகரத்தின் விளைவாகவும் நீதிமுறைப் பிரிவினையின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

## பொதுச்சட்டம்

விவாகரத்துக்கான பொதுச்சட்ட முறைமை இரண்டு பிரதான நியதிச் சட்டங்களினால் ஆளப்படுகின்றது. அதாவது பொது திருமணக் கட்டளைச் சட்டம் (1907), குடியியல் நடபடிக் கோவை (1889), 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க திருத்த சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பவையே இவை.

இதன் கீழ் விவாகரத்தானது 2 அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

1. திருமணக் குற்ற அடிப்படை - (குற்றவியற் கோட்பாடு)
2. திருமண முறிவு அடிப்படை - (திருமண முறிவுக் கோட்பாடு)

இலங்கையில் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டமானது வெளிப்படையாக திருமணக் குற்றவியற் கோட்பாட்டையே அங்கீகரிக்கின்றது. இதன்கீழ் திருமணக் குற்றம் புரிந்த நபரிடமிருந்து / நபருக்கு எதிராக குற்றமற்ற நபர் விவாகரத்துக்கான கட்டளையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

திருமணம் சார் முறிவுக் கோட்பாடு என்பது திருமண உறவானது மீளமைக்கப்பட முடியாத வகையில் சில காரணிகளினால் முறிதலையும், மற்றும் தன்னிச்சையான பரஸ்பர ஒப்பந்தத்தின் கீழ் தரப்பினர்கள் விவாகரத்துப் பெற்றுக் கொள்தலையும் குறிக்கும்.

கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம் என்பவற்றின் கீழான விவாகரத்து முறைகள் வேறுபட்டவை ஆகும் (பொதுச் சட்டத்திலிருந்து). காரணம், அவை மேற்படி திருமண முறிவுக் கோட்பாட்டை அங்கீகரிப்பதனாலேயே ஆகும்.

## விவாகரத்துக்கான அடிப்படை

பொது திருமண கட்டளைச் சட்டம் பிரிவு 19 (1), (2) என்பன பின்வரும் மூன்று அடிப்படைகளில் விவாகரத்து பெற்றுக் கொள்ளப்பட முடியும் என்பதனை அங்கீகரிக்கின்றன.

1. திருமணத்தின் பின்னரான சோரம்;
2. வன்ம உறவறுத்தல்;
3. திருமணத்தின் போதான மாற்ற முடியாத மலட்டுத்தன்மை.

## 1. சோரம்

சோரம் என்பது வாழ்க்கைத் துணைவர்களில் ஒருவர் (கணவன் ./ மனைவி) வாழ்க்கைத் துணைவரல்லாத வேறு ஒருவருடன் மேற்கொள்ளும் உடல் உறவு ஆகும். மேற்படி அம்சம் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றமாக கருதப்படாவிட்டாலும் கூட பொது திருமண, விவாகரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விவாகரத்துக்கான காரணிகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

குடியியல் நடபடிக்கோவை பிரிவு 602இன் படி சோரம் நிரூபிக்கப்பட்டது என்ற அடிப்படையில் நீதிமன்றம் திருப்திப்படுதல் வேண்டும். சோரத்தை எண்பிக்கும் பொறுப்பு பற்றி 2 வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அதாவது ஆரம்ப வழக்குகளில் காணப்பட்ட போக்கானது (குற்றவியல் எண்பிப்பு தராதரம்) நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படல் வேண்டும். ஆனால் பின்னைய வழக்குகளில் நிகழ்தகவுச் சமநிலை என்ற ஆங்கில வழக்குகளை ஒத்த எண்பிப்பு தராதரமே ஏற்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்புதல் / அங்கீகரிப்பு ஆனது வாழ்க்கைத் துணையின் சோரத்தை எண்பிக்க போதுமானது என்பதாகும்.

மேலும் குடியியல் நடபடிக்கோவை (1977) சோரம் பற்றிய வழக்குகளில் புதிய படிமுறை ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. அதாவது வழக்காளி, சோரத்தில் சேர்ந்து இருந்ததாக – இணைப்பு எதிராளியாக அவ்வாழ்க்கைத் துணையிட மிருந்தும் அவருடன் சேர்ந்து சோரத்தில் ஈடுபட்ட 3ஆம் நபரிடமிருந்தும் நட்ட ஈடு பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கு பிரதானமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் யாதெனில் நட்ட ஈடு கோருவதற்கான உரிமை குடியியல் நடபடிமுறைக்கோவை பிரிவு 598இனால் கணவனுக்கு மட்டுமே உரித்தாக்கப்பட்டிருந்தது. இவ் ஏற்பாடு 1975இல் கொண்டு வரப்பட்ட நீதிநிர்வாக திருத்தச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. தற்போதைய தெளிவான சட்ட நிலைமை யாதெனில் நட்ட ஈடு வழக்கு நடவடிக்கையில் மனைவிக்கும் உரிமையளிக்கும் வகையில் பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. (பிரிவுகள் 598 – 599)

## 2. வன்ம உறவறுத்தல்

வன்ம உறவறுத்தல் என்பது வேண்டுமென்றே மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் கட்டாயமாக விவாக கடப்பாடுகளினதும் விலகுதல், முடிவுக்கு கொண்டு வருதலுமாகும். இங்கு எண்ணம், செயல் ஆகிய இரண்டினாலும் திருமண உறவினை முறிக்கும் தன்மை காணப்படுதல் அவசியம்.

உதாரணமாக திருமண இல்லத்திலிருந்தும் நீங்குதல், தொடர்ச்சியாகவும் நியாயமற்ற முறையிலும் சேர்ந்து வாழவும் உறவு கொள்ளவும் மறுத்தல் என்பன செயல் ரீதியாகவும் எண்ண ரீதியாகவும் திருமண வாழ்வை முடித்துக் கொள்ளும் சில குறிகாட்டிகள் ஆகும்.

வன்ம உறவறுத்தல் என்பது 2 வடிவங்களில் இடம்பெறலாம்.

a) சாதாரண வன்ம உறவறுத்தல் (Simple Malicious Desertion)
b) அமைப்புவழி வன்ம உறவறுத்தல் (Constructive Malicious Desertion)

மேற்படி இரண்டு வடிவங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடானது வன்ம உறவறுக்கும் செயன்முறையின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. சாதாரண வன்ம உறவறுத்தல் என்பது உறவறுக்கும் வாழ்க்கைத் துணை திருமண இல்லத்தை விட்டு வெளியேறுதலாகும். ஆனால் அமைப்புவழி வன்ம உறவறுத்தலில் குற்றமற்ற வாழ்க்கைத் துணை மற்றைய வாழ்க்கைத் துணையின் அழுத்தமான செயல்களின் நேரடி விளைவினால் திருமண இல்லத்திலிருந்தும்

நீங்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகின்றார். அதாவது இங்கு திருமண இல்லத்தினின்றும் வெளியேறும் வாழ்க்கைத் துணை குற்றம் அற்ற வாழ்க்கைத் துணை ஆகும். இங்கு 'உறவறுப்பவர்' / குற்றம் செய்த வாழ்க்கைத் துணையானவர் தாம் இருவரும் ஒன்றாக இணைந்து வாழ்வதை சகிக்க முடியாத ஒன்றாக மாற்றியிருக்க வேண்டும். அன்றேல் அவர்களிடையே தாம்பத்திய உறவு இடம்பெறுவதற்கு சாத்தியமற்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்க வேண்டும்.

மேற்படி 2 வகையான உறவறுத்தல்களும் நிகழ்தகவுச் சமநிலையிலேயே காண்பிக்கப்படல் வேண்டும்.

## குடியியல் நடபடிக் கோவையின் கீழான விவாகரத்து

இக்கோவையின் 608 (2) பிரிவின் படி, வாழ்க்கைத் துணைகளுள் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து நீதிமுறை மணப் பிரிவினைக்கான கட்டளையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் மேற்படி கட்டளையிலிருந்து 2 வருடங்களின் பின்பு விவாகரத்துக்கான கட்டளை பெற்றுக் கொள்ளப்படலாம். இங்கு விவாகரத்துக்கான கட்டளை வழங்கப்படும் போது மாவட்ட நீதிமன்றமானது பிரிவு 608 (2)இன் கீழ் கட்சிக்காரர்களிடையே திருமண உறவு மேற்படி பிரிவினைக் காலத்தினுள் இடம்பெற்றிருக்கவில்லை என்பதில் திருப்திப்படல் வேண்டும்.

இச்சட்டக் கோவை மேலும் கூறுவதாவது, நீதிமுறைப் பிரிவினைக்கான விண்ணப்பம் செய்யப்படாவிடினும் கூட வாழ்க்கைத் துணைகளுள் ஒருவர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து ஏழு வருட காலம் இருவரும் ஊனிலும் உறக்கத்திலும் பிரிந்திருப்பார்களேயானால் விவாகரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

நீதிமன்றம். இவ்விண்ணப்பத்தின் மேற்குறிப்பிட்டபடி 7 வருட கால பிரிவினைக்கான நிரூபிப்பைக் கோரி, திருப்திப்பட்ட பின் விவாகரத்துக்கான கட்டளை வழங்கும்.

## முஸ்லிம் சட்டத்தின் கீழான விவாகரத்து

பிரிவு 27 இஸ்லாமிய திருமண நீக்கற் கட்டளைச் சட்டத்தின் படி ஒரு முஸ்லிம் ஆண் தனது மனைவிக்கு எதிராக மூன்று முறை தலாக் (Talak) உரைப்பாரேயாகில் அவர் அதே பெண்ணை மீளவும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார் என்பதாகும். இச்செயன்முறையே இஸ்லாமியச் சட்டத்தின் கீழான விவாகரத்து எனப்படும்.

அன்றேல்

1) அவள் இரண்டாவது கணவனைத் திருமணம் செய்தல்
2) இரண்டாவது கணவனால் அங்கு திருமணம் ஒன்றின் உள்ளமைக்கான ஊகம் எண்பிக்கப்பட்டால்
3) இரண்டாவது கணவனுடனான விவாகம் சட்டத்தின்படி முடிவுறுத்தப் பட்டிருப்பின்.

தயாவ்ஜி என்பவருடைய கருத்துப்படி, கணவனுடைய வாழ்நாளின் போது திருமண நீக்கம் பின்வரும் வழிகளில் ஏற்பட முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது:

1) கணவனால் 'தலாக்' உரைக்கப்பட்டால்.
2) கணவனால், மனைவியுடன் ஒப்பிடும்போது அவள் இஸ்லாமிய சட்டத்தினால் தடுக்கப்பட்ட திருமண உறவு முறைக்குள் அமையப் பெறின். இது அராபிய மொழியில் 'சிஹார்' எனப்படும்.
3) அராபிய மொழியில் 'இல்லா' என்று குறிக்கப்படும் சத்தியத்தைச் செய்து கொண்டதன் மேல் திருமண உறவு போன்ற இன்பங்களினின்றும் விலகியிருத்தல்.
4) மனைவியின் சோரத்தினால் (அராபிய மொழியில் 'லியன்' எனப்படும்).
5) தரப்பினர்களின் ஒத்த இசைவு மூலம் (இது 'ககூல்' அல்லது 'முபாறட்' எனப்படும்).
6) கணவன் / மனைவியின் பௌதீக ரீதியான இயலாமையின் காரணமாக.

7) நீதிமன்றமானது, அங்கு இரண்டில் ஒரு பிரிவினரால் ஒழுங்கீனம் / தவிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது, என அபிப்பிராயப்படின் உதாரணம் – திருமணத்தின் போதுமான வயதடையாமை, ஷபி (Shafi) பிரிவு சட்டத்தின்படி ககூல் முபாறட் விவாகரத்துக்கள் (ஒத்த இசைவின் மூலமான விவாகரத்துக்கள்) மேற்படி கூறப்பட்ட தடைகளுக்கு இணங்க விவாகத்தை விளம்புவதாகக் கருதப்பட மாட்டாது.

சாதாரணமாக ஓர் இரண்டாவது திருமணம் அப்பெண்ணை முதலாவது கணவனை திருமணம் செய்யும் தகுதியை அளிக்குமானால் அது போதுமானது.

விவாகரத்துப் பெற்ற கணவன் / மனைவி மீளத் திருமணம் செய்தல் பற்றி குவாசிகள் சபை பின்வரும் தேவைப்பாடுகளைக் கூறியுள்ளது.

1) மனைவி விவாகரத்தின் பின்பு (Iddat) இடற் ஐ அனுசரித்தல் வேண்டும்.
2) அவ் இடற்றின் பின்பு வேறொரு கணவனை திருமணம் செய்தல் வேண்டும்.
3) அவ் இடையிட்ட திருமணம் கட்டாயம் பூரணமான ஒன்றாக இருக்க வேண்டும்.
4) இரண்டாவது கணவன் தலாக் உரைத்திருக்க வேண்டும்.
5) அதன் பின்பு மனைவி இடற் அனுட்டித்திருப்பதுடன்
6) அவ் இடற் காலப் பகுதியின் பின்பு மறுதிருமணம் தம்பதியினரிடையே இடம்பெற்றிருக்க வேண்டும்.

Shafi சட்டத்தின் (நீதிமன்றத் தலையீடின்றி) மனைவியினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் திருமணம் குலைக்கப்படலாம்:

1) கணவனின் சித்த சுவாதீனமின்மை, மேலும் இச்சித்தசுவாதீனமானது திருமணத்துக்கு முன்னரோ / பின்னரோ ஏற்பட்டிருக்கலாம். மேலும் தம்பதிகளிடையே திருமண உறவு இடம்பெற்றிருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன திருமணம் குலைக்கப்படலாம்.
2) திருமணம் செய்வதற்கு முன் கணவன் அலி ஆக இருப்பின்.
3) திருமணத்தின் முன்னரோ / திருமணத்தின் பின்னரோ கணவன் மலடுத்தன்மை யுடையவராக இருந்து அதன் விளைவாக தாம்பத்திய உறவு ஏற்படாவிடின்;
4) கணவனுக்கு மனைவியைப் பராமரிக்க இயலாவிடின்.

அதே போன்று கணவன் பின்வரும் அடிப்படைகளில் விவாகரத்துப் பெற முடியும்.

1) முழுமையான மனைவியின் சித்தசுவாதீனமின்மை.
2) மனைவி ஒரு தொழு நோயாளியாக / குஷ்ட நோயாளியாக இருப்பின்.
3) திருமண உறவில் ஈடுபடுவதைத் தடுக்கக்கூடிய வலுவான அமைப்பு ரீதியான கோளாறு (இயலாமை) உடலில் காணப்படல்.

## கண்டியச் சட்டத்தின் கீழான விவாகரத்து

கண்டியச் சட்டத்தின் கீழான விவாகரத்தானது எந்தவிதமான சம்பிரதாயங்களும் இன்றி தம்பதிகள் இருவரில் ஒருவர் விரும்பியபோது பெற்றுக்கொள்ளப்படக் கூடிய இலகுவான ஒன்றாகும். ஆயின், இங்கு பிரதானமான அம்சமாக விளங்குவது கணவன் / மனைவி ஆகிய இருவரினதும் எண்ணக் கருத்தாகும். நிரந்தரமான / தற்காலிகமான விவாகரத்து நோக்கமின்றிய பிரிவினையானது திருமணத்தைக் குலைக்க மாட்டாது. மேலும் அப்பிரிவினை விவாகரத்தாக பதியப்படவும் மாட்டாது. ஆகவே மனைவி குடும்பக் கசப்புணர்வு / சண்டை, சின்னமுத்து நோய் தொற்றக்கூடிய அபாயம் காரணமாக கணவனை விட்டு தற்காலிகமாக வெளியேறுதல் விவாகரத்தல்ல. எனவே அவள் பிரிந்திருக்கும்போது கணவன் இறப்பினும் கூட அவள் விதவைக்குரிய சகல சலுகைகளுக்கும் உரித்துடையவள்.

### பின்ன திருமணக் குலைவு

இவ் வகையிலான திருமணம் பெரும்பாலும் நன்மதிப்பு, பெற்றாரின் அந்தஸ்து / தகுதி என்பவற்றின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் இங்கே பெற்றோரே திருமண இல்லத்தை அமைத்துக் கொடுக்கின்றனர். எனவே பெற்றோர் இருவர் அல்லது ஒருவரின் தனித்த தீர்மானமானது தமது மகளின் சம்மதமின்றியே திருமணத்தை முடிவுக்கு கொண்டுவரக்கூடிய ஒன்றாகும்.

ஆகவே தந்தை / தாய் தனது ஆதனத்தின் அடிப்படையிலும் பெற்றோர் இல்லாவிடின் சகோதரன் பின்ன திரும்மணக் கணவனைத் துரத்தி தமது ஆதனங்கள் மீட்டுக்கொள்ள முடியும். மேற்படி சிறப்புரிமை இக்குறிப்பிட்ட உறவு முறையினருக்கு மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது இறப்பின்

பின் மனைவியின் சம்மதமின்றி எவரும் திருமணக் குலைவில் முடியாது. அன்றேல் கெட்ட நடத்தை உடையவராக இருந்து அதன் விளைவாக குடும்பத்துக்கு அவமானம் ஏற்பட்டாலேயன்றி இது சாத்தியமல்ல.

அதே போன்று ஒரு தந்தைக்கு தாயினால் தனது தனிப்பட்ட ஆதனத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட Binna திருமணத்தை குலைப்பதற்கு அதிகாரம் இல்லை. ஒரு விதவை மனைவி கூட தனது இறந்த கணவனின் வழியுரிமையாக கொடையாக கிடைத்த வீடு, மற்றும் ஆதனங்களின் வாரிசாக இருப்பினும் கூட தனது மருமகளை வெளியேற்ற முடியாது.

ஆயினும் கூட தாய் தனது மகளையும் அவளுடைய கணவனையும் கூட வீட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்த முடியும். ஆயின் அவ்வாறு செய்யும் போது அவர்களுடைய மற்றும் அவர்களின் பிள்ளைகளுடைய உரிமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமற் செய்ய வேண்டும்.

அதேபோன்று சகோதரர்கள் / அவர்களுடைய பிள்ளைகள் மனைவியின் பெற்றோரால் கொண்டுவரப்பட்ட கணவனை வெளியேற்ற முடியாது. மனைவி, தானே விரும்பியபடி தனது கணவனை விவாகரத்து செய்து கொள்ளக் கூடிய உரிமை உண்டு.

<u>டீக திருமணத்தின் கீழான விவாகரத்து</u>

மேற்படி திருமணத்துக்கு தேவையான சம்மதம் உரிய திறத்தினரால் ஒரு முறை கொடுக்கப்பட்டால் அதை மீள மாற்றவோ / பின்வாங்கவோ முடியாது. அதாவது பெற்றோர் அல்லது தகப்பனின் உறவினர்கள் எவராயினும் கட்சிக்காரர்களின் விருப்பத்துக்கு முரணாக விவாகரத்தை ஏற்படுத்த முடியாது. அன்றேல் நல்ல காரணத்தின் அடிப்படையில் அதாவது, நடத்தை குடும்பத்துக்கு அவமானத்தை ஏற்படுத்துகின்றது என்ற ஏதுவின் அடிப்படையிலன்றி.

ஆயின் இங்கு குறிப்பிட்ட தரப்பின் சம்மதம் என்பது, வலுவாக இருக்க வேண்டுமாயின் அது உண்மையாக வழங்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது வலுக்கட்டாயத்தின் அடிப்படையில் அல்லது மோசடி / பயம் என்பவற்றின் செல்வாக்கினால் அச்சம்மதமானது பெறப்பட்டிருப்பின் அக்காரணத்தின் அடிப்படையில் திருமணத்தைக் குலைக்க முடியும்.

பிரதானமாக தம்பதிகளிடையே சமூக ஏற்றத்தாழ்வு சாதிப் பாகுபாடு ஒரு தடையாக இருக்குமாயின், அதாவது ஒரு பெண் தன்னிலும் பார்க்க சாதியில் குறைந்த ஆடவனை பெற்றோர், சகோதரர்கள், மாமன் ஆகியோரின் சம்மதத்துடன் திருமணம் புரிந்தால் அவர்களில் ஒருவர் அதில் தலையிட்டு அவ் அவமானமான ஓர் சமூக இணைப்பைத் தடுக்க முடியும். ஆயின் அவர்கள் அவ்வாறு செய்யும் சந்தர்ப்பத்தில் அவளுக்கு பொருத்தமான ஒரு கணவனைத் தேடிக் கொடுக்கும் வரை அவளைப் பராமரிக்க வேண்டியவர்களாகின்றனர்.

## நியதிச் சட்டத்தின் கீழான விவாகரத்து

1870ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க கண்டிய திருமண, திருமண நீக்கற் கட்டளைச் சட்டம் பதிவு செய்யப்பட்ட திருமணம், விவாகரத்து பற்றி விளக்கமளிக்கின்றது. அதன் அடிப்படையில் பின்வரும் வழிகளின் மூலம் விவாகரத்து பெற்றுக் கொள்ளப்பட முடியும்:

1) திருமணத்தின் பின்னரான மனைவியின் சோரம்.
2) கணவனுடைய சோரத்துடன் இணைந்த கொடூரமான நடத்தை.
3) ஒன்றிணைந்து இன்பமாக வாழ முடியாமை.
அதாவது இதன் கீழான பரீட்சையாக ஒரு வருடம் ஊனிலும் உறக்கத்திலும் இருந்து இருவரும் பூரணமாகப் பிரிந்திருத்தல்.
4) பூரணமானதும் தொடர்ச்சியானதுமான உறவறுத்தல் 2 வருடங்களுக்கு இடம்பெற்றிருப்பின்;
5) ஒத்த இசைவின் அடிப்படையில்.

மேற்படி திருமணக் குலைவுக்கான கட்டளையை மாகாணப் பதிவாளர் / உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இங்கு பதிவாளர் மேற்படி நியதிச் சட்டத்தில் கூறப்பட்ட விவாகரத்துக்கான அடிப்படைகளுள் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனத் திருப்திப்படுத்தப்பட்டால் விவாகரத்தை பதிவு செய்வார்.

## பிள்ளைகளின் பாதுகாவல் – பொதுச்சட்டம்

பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பான புராதன சட்டக் கோட்பாடானது ரோமன் டச்சு சட்ட எண்ணக் கருவிலிருந்து எடுக்கப்பட்டது ஆகும். ரோமன் டச்சுச் சட்டம் இலங்கையின் பொதுச் சட்டமாக இருந்த காலத்தில் மேற்படி பாதுகாவல் தொடர்பான அடிப்படைக் கருத்துக்கள் எமது சட்டத்தில் புகுந்து கொண்டன.

மேலும் ஆங்கிலச் சட்டமும் பிள்ளைகளின் பாதுகாவல் பற்றிய சட்டத்தினுள் புகுந்து கொண்டமையினால் மேற்படி சட்டக் கோட்பாடுகள் சில அந்த அடிப்படையிலும் திருத்தப்பட்டன.

குறிப்பாக இலங்கையைப் போன்ற கலப்புச் சட்ட முறைமை நிலவும் ஒரு நாட்டில் வெவ்வேறு சமூகங்களுக்கும் அவற்றை ஆளும் வழக்காற்றுச் சட்டத்தின் கீழ் பாதுகாவல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளன. உதாரணம் கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம்.

ஆனால் தேசவழமையால் ஆளப்படும் மக்களுக்கு பொதுச்சட்டத்தின் கீழான பாதுகாவல் பற்றிய ஏற்பாடுகளே பிரயோகிக்கப்படும்.

பின்வரும் விடயங்கள் பாதுகாவல் தொடர்பான பொதுச்சட்டக் கருத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும்:

- பிள்ளையொன்று பெற்றோர், காப்பாளரின் பாதுகாவலின் கீழ் கட்டாயமாக இடம்பெற வேண்டிய கால எல்லை பொதுவாக பராயமடையும் வயது வரையுள்ள காலப்பகுதி ஆகும். (இது வெவ்வேறு சட்டங்களுக்கேற்ப வேறுபடும்).

- பெற்றோர் விவாகரத்துப் பெற்றவர்களாயின் / நீதிமுறைப் பிரிவினையைப் பெற்றுள்ளவர்களாயின் பிள்ளையின் பாதுகாவலை யாரிடம் ஒப்படைப்பது என்ற பிரச்சனை எழுகின்றது.

ரோமன் டச்சு சட்ட முறைமையின்படி பிள்ளைகளின் பாதுகாவலைக் கோருவதில் தந்தைக்கே முன்னுரிமை அதிகாரம் உண்டு. மேற்படி அம்சம் ரோமன் டச்சு சட்டத்தின் கீழ் பாதுகாவல் தொடர்பான ஓர் அடிப்படை ஊகம் ஆகும். ஆனால் இது மறுதலிக்கக் கூடியது. இக் கோட்பாடு இலங்கைச் சட்ட முறைமையில் மிகுந்த செல்வாக்கைப் பெற்ற ஒன்று ஆகும்.

- ஆங்கில சட்டக் கோட்பாட்டின்படி பாதுகாவல் தொடர்பில் தந்தை / தாய்க்கு என ஏற்கனவே ஒதுக்கப்பட்டதான முன்னுரிமை எதுவுமில்லை. இங்கு பிள்ளையின் நலன் என்ற அம்சமே ஒரேயொரு அளவுகோலாகக் கருதப் படுகின்றது. இதன் அடிப்படையில் பாதுகாவல் உரிமையானது தந்தை / தாயிடமோ / 3ஆம் நபரான நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படும் காப்பாளரிடமோ ஒப்படைக்கப்படும்.

- இலங்கையின் நீதித்துறை முறைமையில் இரு கோட்பாடுகளும் கருத்துக்கு எடுக்கப்படுகின்றன. ஆகவே பிள்ளையின் பாதுகாவலில் தந்தைக்கு முன்னுரிமை இருப்பினும் கூட தாயாருக்கு பின்வரும் அடிப்படைகளில் அதனை மறுதலிக்க / மறுத்துரைக்க நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன:

1. அப்பிள்ளை ஒரு சிசுவாக இருப்பின், அதாவது அப்பருவத்தில் குழந்தையைப் பராமரிப்பதில் தாயாரின் பங்கே அதிகமானது என்ற அடிப்படையில்;
2. தந்தை வேறொரு பெண்ணுடன் சோரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பின்;
3. தந்தை போதைவஸ்து / மது பாவனையாளன், எனவே அவனுடைய நடத்தை குழந்தையைப் பாதிக்கும் எனின்;
4. தந்தை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருப்பின் (தொழில் இன்றி) குழந்தையை பராமரிக்க முடியாது;
5. அப்பிள்ளை தந்தையைச் சார்ந்துள்ளோரால் துன்புறுத்தப்படும் வாய்ப்பு இருப்பின் (தந்தையின் சகோதரி, தாயார் போன்றோரால்);
6. வேறு ஏதாவது காரணிகள் குழந்தையின் நலனைப் பாதிக்கும் என நீதிமன்றம் திருப்திப்படின்.

அதே போன்று தந்தைக்கும் பின்வரும் சந்தர்ப்பங்களில் தாய்க்கு எதிராக பிள்ளையின் பாதுகாவலைக் கோரும் உரிமை வழங்கப்பட்டுள்ளது:

1. தாய் ஒழுக்கக்கேடான ஒரு நடத்தை கொண்டவர் எனின் இங்கு விசேடமாக பிள்ளை பெண் ஆயின் அதன் பாதுகாவலை தாயிடம் ஒப்படைப்பது ஏற்றதல்ல;

2. தாயாருக்கு அதனைப் பராமரிக்கக்கூடிய போதிய வருவாய் இல்லாவிடின்;

3. தாய் ஒரு தொழில் செய்யும் பெண்ணாகவும் குழந்தையின் பராமரிப்பு கடமைகளில் அக்கறை அற்றவராக இருப்பின்.

- பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பான பழைய கருத்தேற்பு ஒன்றாக பெண் பிள்ளைகளின் பாதுகாவல் தாயிடமும் ஆண் பிள்ளைகளின் பாதுகாவல் தந்தையிடமும் வழங்கப்பட வேண்டும் என்பது அமைகின்றது. ஆனாலும் கூட தற்போதைய நீதிமன்றத் தீர்ப்புக்களில் அவை பெருமளவுக்குப் பின்பற்றப்படுவதில்லை என்பதுடன் மிகக் குறைந்தளவு முக்கியத்துவமே இக்காலத்தில் வழங்கப்படுகின்றது.

- அதே வேளை பிள்ளையின் சம்மதம் / தன் விருப்பு என்ற அம்சம் ஒருபோதும் பாதுகாவல் பற்றிய பிரச்சனையைத் தீர்மானிப்பதில் கருத்துக்கு எடுக்கப்படுவதில்லை. காரணம் என்னவெனில் பெற்றோர் / பாதுகாவலரின் பாதுகாப்பை வேண்டி நிற்கும் ஒரு பராயமடையாத பிள்ளைக்கு தனக்கு நன்மையானவை எவை, தீமையானவை எவை எனத் தீர்மானிக்கும் தகைமை இல்லை என்பதேயாகும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் 3ஆம் நபரான நீதிமன்றம் அதியுயர்ந்த பாதுகாவலன் என்ற அந்தஸ்திலிருந்து பிள்ளைகளின் பாதுகாவல் பற்றிய பிரச்சனைக்குத் தீர்வு காணும்.

## வழக்காற்றுச் சட்டங்களின் கீழ் பாதுகாவல்

வழக்காற்றுச் சட்டங்களால் ஆளப்படும் / வழக்காற்றுச் சட்டங்கள் ஏற்புடையதாகும் நபர்களைப் பொறுத்தவரையில் பிள்ளைகளின் சட்ட ரீதியான பாதுகாவல் தொடர்பிலும் விசேடமான சட்டக் கோட்பாடுகள் ஏற்புடையவை ஆகும். மேலும் பிள்ளைகளின் மகவேற்பு கட்டளைச் சட்டத்தின் சில பிரிவுகளும், குடியியல் நடபடி முறை கோவையின் சில பிரிவுகளும் மேற்படி சட்டங்களால் ஆளப்படும் மக்களுக்கும் சமமாக ஏற்புடையன. பாதுகாவலரை நியமித்தல் தொடர்பான விண்ணப்பமானது கடந்த காலங்களில் மாவட்ட நீதிமன்றங்களினால் காப்பாளனை நியமிக்கும் நடவடிக்கைகளின் போது கையாளப்பட்டு வந்தன. மற்றும் இளைஞர்கள், பிள்ளைகள் தொடர்பான கட்டளைச் சட்டமும் இவ்வாறு ஒரு பொதுவான பிரயோகத்திற்கு உரிய சட்டம் ஆகும். இங்கு வழக்காற்று சட்டங்களால் ஆளப்படுவோரிடையே, பிள்ளையின் பாதுகாவல் தொடர்பில் பெற்றோருக்கிடையே ஏற்படும் பிணக்கானது, திருமணம் குலைக்கப்பட முன்போ அல்லது பின்போ ஆட்கொணர்வு மனு தொடர்பான நடவடிக்கையின் போதே கையாளப்படும். ஏனெனில் கண்டிய, முஸ்லிம் சட்டங்களில் திருமணம் சார் வழக்கு நடவடிக்கைகளில் மேற்படி அம்சத்தை தீர்மானிப்பதில் ஏற்பாடுகள் இல்லை. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப நீதிமன்றங்களுக்கும் பாதுகாவல் பற்றிய பிரச்சனைகளை விசாரிக்கும் நியாயாதிக்கம் உண்டு. ஆயினும் இவ்வம்சம் கண்டிய, முஸ்லிம் சட்டங்களில் உள்ள பராமரிப்பு பற்றிய குறிப்பான ஏற்பாடுகளுடன் முரண்படுவதாக இல்லை.

## தேசவழமைச் சட்டமும் கண்டியச் சட்டமும்

பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பில் முரண்பட்ட சான்றுகள் காணப்பட்டாலேயன்றி பொதுச் சட்டக் கோட்பாடுகள், வழக்காற்றுச் சட்டங்களால் ஆளப்படுவோருக்குங்கூட ஏற்புடையதாகும் என்பது இலங்கை நீதிமன்றங்களின் கருத்து வெளிப்பாடாகும். இதன் விளைவாக விருத்தியடைந்த சட்ட முறைமைகள் பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பில் தேசவழமையிலோ, கண்டியச் சட்டத்திலோ

இல்லாவிடின் பாதுகாவல் தொடர்பான பொதுச்சட்டக் கருத்துக்களே அவற்றுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. தேசவழமைச் சட்டத்திலுள்ள சில தீர்ப்புக்கள் பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பில் தந்தைக்கே வழியுரிமையாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றன. சட்ட ரீதியான பிள்ளைகளின் தந்தை தேசவழமையின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தான் உயிருடன் இருக்கும்போதே பிறிதொருவருக்கு மாற்றீடு செய்ய முடியும்.

கண்டியச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பின்ன திருமணத்தின் மூலமான ஒரு கணவன் தனது திருமணத்தின் விளைவாகப் பிறந்த பிள்ளைகளின் பாதுகாவலைக் கோர முடியாது. ஆயின் அடிப்படையில் அவர் டீக திருமணம் செய்திருந்து அத்திருமண உறவானது காலப்போக்கில் பின்ன திருமணமாக மாற்றப்பட்டிருப்பின் அவர் தனது உரிமையை கோர முடியும்.

டீக திருமணம் ஒன்று குலைக்கப்பட்டதன் மேல் பிள்ளைகளின் பாதுகாவலைப் பொறுப்பேற்கும் உரிமையானது விவாகரத்துக்கு அடிப்படையான காரணங்களின் கீழ் வேறுபடும். அங்கு குற்றம் செய்த திறமாக மனைவி அமைந்திருப்பின், கணவன் தனது விருப்பத்தின் பேரில் தானே சகல பிள்ளைகளையும் வைத்திருக்கலாம். அல்லது சிலவற்றை / ஒன்றை மனைவியிடம் ஒப்படைக்கலாம். ஆனால் இவ்வாறு ஒப்படைக்கும் பிள்ளைகளின் பங்கு அரைப்பங்கை மேவக் கூடாது. ஆனால் கணவன் மட்டுமே மணப்பிரிவினைக்கு காரணமாயின் மனைவிக்கு, பிள்ளைகளை கணவனிடமே ஒப்படைக்கவோ, அல்லது ஒன்று இரண்டு பிள்ளைகளின் பாதுகாவலைப் பொறுப்பேற்று தனது கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கவோ விருப்புரிமை உண்டு.

மகளை திருமணம் செய்து கொடுக்கும் உரிமை, மகனுடைய திருமணத்துக்கு சம்மதம் வழங்கும் உரிமை என்பன எந்தப் பெற்றோரை அப்பிள்ளை சார்ந்துள்ளதோ அவர்களின் ஏகோபித்த சிறப்புரிமை ஆகும். ஆயின் மேற்படி விதிக்கு விலக்காக, ஒரேயொரு மகள் மட்டுமே அவர்களுக்கு பிள்ளையெனின், தந்தை தனது ஆதனங்கள் குடும்பப் பெயர் என்பவற்றைக் காப்பாற்றும் நோக்குடன் அவளை பின்ன முறையிலான திருமணத்தைப் புரியுமாறு வற்புறுத்தும் உரிமை பெற்றுள்ளார்.

## இஸ்லாமியச் சட்டம்

இஸ்லாமியச் சட்டமானது பாதுகாவல் தொடர்பிலே குறிப்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளமையினாலும் மேலும் அவை காலங்காலமாக பல்வேறு உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனாலும் அதன் அடிப்படையில் பாதுகாவல் தொடர்பான பெற்றோரின் உரிமையைத் துணிய முடியும். பராயமடையும் கட்டளைச் சட்டம் பராயமடையும் வயதினை 21 ஆக விதிக்கின்றது. மேற்படி அம்சம் பொதுச்சட்ட / முஸ்லிம் சட்டக் கோட்பாடுகளால் மாற்றப்படாதவிடத்து ஒரு பிள்ளை 21 வயதுக்குப் பின் பெற்றோரின் அதிகாரத்திலிருந்து விடுதலை பெறுகிறார். இது இன்று 18 வயதாகக் குறைக்கப்பட்டு விட்டது. பாதுகாவல் பற்றிய இஸ்லாமியப் பெற்றாரின் உரிமையானது இலங்கையில் பராயமடையாத பிள்ளைகள் தொடர்பிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண் பிள்ளையின் பாதுகாவல் தொடர்பில் இஸ்லாமிய தாயாருக்கே முன்னுரிமை உண்டு என இலங்கை நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன. மேலும் 'ஷபி' பிரிவுச் சட்டத்தின்படி பொதுவாக தாயாரின் அப்பாதுகாவல் உரிமை வெறுமனே அப்பிள்ளை பருவமடையும் வரையிலன்றி அப்பிள்ளை திருமணம் செய்யும் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்ப்புக்கள் 'சபி' பிரிவு பெண்பிள்ளை 21 வயதுக்குக் கீழும், (அவ்வயதில் அவள் பராய வயதை அடைந்திருப்பினும் கூட) ஏனைய பிரிவுகளை பொறுத்தவரை அவள் பருவமடையும் வயது பற்றிய கருத்து தொடர்ந்து நவீன சட்டத்திற்கும் பொருத்தமானது எனக் கருதப்பட்டால் அது இலங்கை முஸ்லிம்களுக்கும் ஏற்புடையது. எனவே சட்ட ரீதியான பாதுகாவலானது 18 வயதை விட அந்த வயது (இலங்கையில் பராய வயது) வரையே கோர முடியும்.

நீதிமன்ற தீர்ப்புக்களின்படி தாயிடம் ஒப்படைக்கப்படும் பாதுகாவல் உரிமை (பெண் பிள்ளையின்) சில சந்தர்ப்பங்களில் தாயின் தாயாரிடம் / தாய்வழிப் பாட்டியிடம் மாற்றம் செய்யப்படலாம். எனவே தந்தை ஒருபோதும் இக்கோரிக்கையில் வெற்றி பெற முடியாது.

எமது நீதிமன்றங்கள் 'சபி', 'ஹனாபி' ஆகிய இரு பிரிவுகளையும் பொறுத்தவரையில் ஒரு பொதுவான கோட்பாடாவதாயின் பாதுகாவல் உரிமை ஆண்பிள்ளையைப் பொறுத்தவரையில் 7 வயதுடன் முடிவடைகின்றது என்பதாகும்.

அதன்பின் அப்பிள்ளை, பருவவயது வரும்வரையுள்ள காலப்பகுதிக்கு / தற்துணிபு விளக்கம் பெறும் காலப்பகுதி வரையில் (18) தனது பாதுகாவலை தனது விருப்பின் பேரில் இருவரில் ஒருவரிடம் ஒப்படைக்கலாம்.

இஸ்லாமிய சட்ட அதிகாரத்தின்படி, தாயார் தடுக்கப்பட்ட உறவு முறையுடன் தொடர்புடையவரல்லாத ஒருவரை மணம் செய்தாலேயன்றி அவள் தனது பாதுகாவல் உரிமையை இழப்பாள். மேற்படி கோட்பாடு சட்ட ரீதியான பிள்ளையின் பாதுகாவல் தொடர்பான உரிமைக் கோரிக்கையில் பெற்றோருக்கிடையே / பெற்றோருக்கும் 3ஆம் நபருக்கிடையே பிணக்கு வரும்போதே பிரயோகிக்கப்படும்.

இஸ்லாமியச் சட்டம் சட்ட ரீதியற்ற / நெறிமுறையற்ற பிள்ளையின் பாதுகாவல் தொடர்பாக பெற்றோரின் உரிமையை அங்கீகரிக்கவில்லை. சில சமயங்களில் தாய் அப்பிள்ளையின் பாதுகாவலராக இருப்பினும் கூட, சட்டமானது அதனை "வெறுமனே பாதுகாப்பு பராமரிப்பு" என்ற அடிப்படையிலேயே கருதுகின்றது. 7 வயது வரும்வரை அப்பிள்ளை தாயின் பாதுகாவலில் விடப்படும். அதன் பின்னரே சட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட ஒரு பாதுகாவலர் பாதுகாப்பு உரிமையை கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

## பராமரிப்பு – ஒரு பொது நோக்கு

தென் ஆபிரிக்க நீதித்துறையாளர்கள் கல்வித்துறையாளர்கள் ஆகியோரின் கருத்துப்படி கணவன் திருமணம் சார் அதிகாரத்தின் காரணமாக தம்பதிகளின் வாழ்க்கை முறையை தீர்மானிக்கும் தகவுடைய பராமரிக்கும் கடப்பாடானது (தனது மனைவியை) அவளுடைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மட்டுமன்றி பராமரிப்பானது உணவு, உடை, மருத்துவ வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தலும் அடங்கும். இவ்வம்சம் அவர்களின் சமூக நிலை / அந்தஸ்து, வாழ்க்கை முறை, நிதி மூலவளங்கள் என்பவற்றின் அடிப்படையில் தங்கியுள்ளது. எனவே கணவன் திருமணத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இவ் அதிகாரத்தினை நியாயமான முறையில் பிரயோகித்தல் வேண்டும்.

### இலங்கையில்

இலங்கையில் பராமரிப்பு என்ற கருத்தேற்பின் உள்ளடக்கம் தொடர்பில் இரண்டு கருத்தேற்புக்கள் முக்கியமானவை. பராமரிப்பு சட்டத்தின் அடிப்படையில் முதலாவது கருத்தானது பராமரிப்பு என்பது நாளாந்த வாழ்க்கை நடைமுறையில் கருதப்படுவதனையே குறிக்கும். இதன்படி 'பராமரித்தல்' என்பது உணவு, உடை, ஏனைய அடிப்படை வசதிகளை வழங்கி ஆதரித்தல் என்பதாகும். இரண்டாவது கருத்தேற்பின்படி பராமரிப்பு என்பது தரப்பினர்களுக்கு ஒரு தரிப்பிடத்தை வழங்குதல் என்பதாகும்.

இலங்கையில் பொதுச் சட்டக் கோட்பாடுகள் பராமரிப்பு கட்டளை சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. போதுமான காரணமின்றி சேர்ந்து வாழ மறுப்பின் பராமரிப்புக் கோரும் அவளுடைய உரிமையை சட்டம் மறுக்கின்றது. இரண்டு நியாயாதிக்கங்களிலும் கணிசமான அதிகாரம் பெற்ற ஒரு கருத்தாக கணவனுடைய பராமரிக்கும் உரிமையானது அடிப்படையானது என்றும் மனைவியின் உரிமை இரண்டாம் படியாகவும் கொள்ளப்படுவதுடன் கணவனே அவர்கள் வாழ வேண்டிய வாழ்க்கைத் தராதரத்தினை தீர்மானிக்கக் கூடியவனாகவும் உள்ளான்.

## அ) இலங்கையில் பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மனைவி கோரக்கூடிய பராமரிப்பு

கட்டளைச் சட்டத்தின்படி நீதிவான் யாருடைய கணவனுக்கு பராமரிக்கக்கூடிய போதிய வசதியிருந்து, மேலும் பராமரிக்க தவறியும் இருப்பின் மனைவிக்கு மாதாந்த உதவு தொகை வழங்குமாறு கட்டளை பிறப்பிக்கலாம்.

மனைவி பெற்றுக் கொள்ளக்கூடிய பரிகாரத்தின் அளவானது அடிப்படையில் நீதிமன்றமானது 'போதுமான வசதிகள்' 'பராமரிக்க மறுத்தல் / தவறுதல்' 'பராமரிப்பு என்பது எதனைக் கருதும்' என்ற சொற்பதங்களுக்கு வழங்கும் நீதிமுறைப் பொருள் கோடலிலேயே தங்கியுள்ளது.

### 1) போதிய வசதிகள் கொண்டிருத்தல்

இலங்கை நீதிமன்றங்கள் 'போதுமான வசதிகள் கொண்டிருத்தல்' என்ற சொற்றொடருக்கு மிகப் பரந்த ஒரு பொருள்கோடலைத் தந்துள்ளன. இதன் விளைவாக நீதிமன்றங்கள் கணவனின் வருவாய் மற்றும் உழைக்கும் திறன் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அவன் தனது மனைவியை பராமரிக்க வேண்டிய கடப்பாடு உடையவரா என்பதைத் தீர்மானிக்கின்றன.

இதற்கு மேலாக, கணவன் சகல நிலைகளிலும் தொழிலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியில் உள்ளார். 1896ஆம் ஆண்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்கள் ஒரு மனிதன் வேலையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளான் என்பதற்கு மிக உறுதியான நிரூபிப்பினைக் கோரின (அந்நபர் வேலையொன்றினைப் பெறுவதற்கு கடுமையாக முயற்சி செய்யினும் கூட).

மேலும் இவ்வாறு பராமரிப்பைக் கோரி விண்ணப்பிப்பவர் எதிராளியின் கணவன் மறுக்கின்றார் எனவும் நிரூபிக்க வேண்டும். இலங்கை நீதிமன்றங்களின் அணுகுமுறையானது தெளிவாக கணவன் என்ற நிலையில் உள்ளவர் எந்த ஒரு வழியிலாவது தனது மனைவி, பிள்ளைகள் ஆகியோரை திருமணம் நிலைபேறாக இருக்கும் போதும் அல்லது முறிவடைந்த போதும் கூட பராமரிக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டது என நாம் கூறலாம்.

2) பராமரிக்க மறுத்தல் / அசட்டை செய்தல்

இங்கு கணவன் மனைவியுடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டு அதன் விளைவாக மனைவி எதிர்காலத்தில் பராமரிக்கும் உரிமையை விட்டுக் கொடுப்பதாக குறிப்பிட்டு, இணங்கியிருப்பின் அதனை அடிப்படையாக வைத்து கணவன் முழுமையாக தனது மனைவியை பராமரிக்காது மறுக்க முடியாது.

3) மனைவியின் நிதி நிலைமை தொடர்பான அம்சம்

1972ஆம் ஆண்டில் பராமரிப்பு கட்டளைச் சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் பின்பு பராமரிப்புக் கட்டளையைப் பிறப்பிக்கும் ஒரு நீதிவான் எதிராளியின் வருமானம் மற்றும் ஏனைய வசதிகள், விண்ணப்பிப்பவரின் நிலையை அல்லது எந்தப் பிள்ளையின் சார்பில் பராமரிப்புக்களை வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பவை தொடர்பில் கட்டளையை ஆக்குமாறு வேண்டப்படுகின்றார். அதாவது மனைவியால் பராமரிப்பு வழக்கு கொண்டு வரப்படும்போது மனைவியின் நிதிவளங்களைப் பிரதானமாகக் கவனத்துக்கு எடுத்தே கணவனின் பராமரிக்கும் கடப்பாட்டை தீர்மானிப்பதனை சட்டத்துறை அங்கீகரித்துள்ளது.

## ஆ) <u>திருமணக் குற்றமும் பராமரிப்புக் கட்டளைச் சட்டமும்</u>

இவ்வம்சம் தொடர்பான பொதுச்சட்டக் கோட்பாடு யாதெனில், மணத்துக்கு விசுவாசமுடையவளாக இருக்கும் வரையே பராமரிப்பு தொடரும் என்பதாகும். இதனையே பராமரிப்பு கட்டளைச் சட்டமானது பின்வருமாறு கூறுகின்றது: 'மனைவியானவள் சோரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பின் அல்லது போதுமான காரணமின்றி கணவனுடன் இணைந்து வாழ மறுப்பின் அவள் உதவுதொகையைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவளல்ல'. இவற்றைவிட நடைமுறையிலுள்ள பராமரிப்பு கட்டளையானது மேற்படி சோரம் / உறவறுத்தல் போன்ற மனைவியின் நடத்தைகளினால் ரத்துச் செய்யப்படலாம்.

'சோரத்தில் வாழ்தல்' என்பதன் கருத்து அவ்விண்ணப்பம் (பராமரிப்பு விண்ணப்பம்) செய்யப்படுவதற்கு முன்னர் இருக்க வேண்டுமேயன்றி விண்ணப்பம் செய்யப்படும்போது சோரத்தில் வாழ்ந்து கொண்டிருத்தல் கருத்துக்கு எடுக்கப்பட மாட்டாது.

மேலதிகமாக, அவள் தொடர்ச்சியாக சோர நடத்தையுடன் கூடிய வாழ்வை மேற்கொண்டுள்ளாள் என கணவன் நிரூபிக்க வேண்டும்.

'போதிய காரணமின்றி வேறாக வாழ்தல்' என்பதன் கருத்து, அவள் நீதிமன்றத்தை அக்காரணத்தின் அடிப்படையில் திருப்திப்படுத்துவதில் தங்கியுள்ளது. உதாரணமாக கணவனின் தொடர்ச்சியான சோரம். ஆனால் கணவனின் தாயார் ஒரே வீட்டில் வசிக்கின்றார் என்பது போதிய காரணம் எனக் கொள்ளப்படமாட்டாது.

## இ) மனைவியைப் பராமரிப்பதற்கான நிபந்தனையுடன் கூடிய முன்மொழிவும் பரஸ்பர இணக்கத்திலான பிரிவினையும்

இங்கு கணவன் மனைவியை நிபந்தனையின் அடிப்படையில் அதாவது அவள் அவனுடன் வாழ்ந்தால் பராமரிப்பதாக ஒப்புக்கொண்டு அவள் அவ்வாறு செய்ய மறுப்பின் அது அவளுடைய பராமரிப்பு பெறும் உரிமையை மறுக்கும் அன்றேல் அவள் மேற்படி சட்டத்தின் கீழ் உள்ள விதிவிலக்குகளுக்குள் அமைவதாக எடுத்துக் காட்டுதல் வேண்டும்.

இங்கு கணவனின் இக்கோரிக்கையானது நன்நோக்கமுடைய ஒன்றாகவும் வெறுமனே கடப்பாடு என்ற பெயரில் செய்யும் ஒன்றாக இருக்கக் கூடாது. உதாரணம்: அவன் சோரத்தில் இருக்கக் கூடாது.

## அமுலாக்கும் நடவடிக்கை முறைகள்:

இலங்கையில் பராமரிப்பு உதவு தொகைக்கு உரித்தான ஒரு நபரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேல் அதனைச் செலுத்தத் தவறும் ஒரு கணவன் / தந்தை ஒன்றில் சாதாரண / கடூழிய சிறைத்தண்டனைகளுள் ஒன்றினால் தண்டிக்கப்படலாம். முதலில் நீதிவான் பிடியாணையை விடுத்து அதன் மூலம் குறிப்பிட்ட அந்த நபர் செலுத்த வேண்டிய தொகையை தண்டப்பணமாக அறவிடுவார்.

இது தொடர்பில் 1972ஆம் ஆண்டில் மாற்றுவழிப் பரிகாரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நீதிவான் அந்த நபர் 2 மாதங்களுக்கு மேல் அப் பணத்தொகையை செலுத்தவில்லை என்பதனை அறிந்தால் அவருடைய சம்பளத்தைக் கைப்பற்றுமாறு கட்டளையிடுவார். இந்த நெறிப்படுத்தல் எதிராளியின் தொழில் தருநருக்கு விடுக்கப்பட்டு அவர் குறிப்பிட்ட நபரின் சம்பளத்திலிருந்து அந்நபரால் செலுத்த வேண்டிய பணத் தொகைகளையும் கழித்து நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்படுவார். நீதிமன்றம் அப்பணத்தொகையை உரிய நபருக்கு செலுத்த, குறிப்பிட்ட பராமரிப்புத் தொகையை தபால் அலுவலகம், வங்கி, பிரதேச வருமான இலாகா என்பவற்றில் வைப்பிலிட்டு அவற்றிலிருந்து உரிய நபர் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாடு செய்யலாம். அன்றேல் அவ்வாறு மேற்படி அலுவலகங்களுக்குச் செலுத்தத் தவறினால், 7 நாட்களுக்குள் அலுவலகப் பொறுப்பாளர்கள் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இது தொடர்பில் மேற்படி அறிவிப்புக் கிடைக்கப்பெற்றால் முறையான விசாரணையொன்று நடாத்தப்பட்டு அந்த நபர் தண்டப்பணம் செலுத்துவதற்கு அன்றேல் சிறைத்தண்டனையால் தண்டிப்பதற்கு, இக்கட்டளைச் சட்டம் நீதிமன்றத்துக்கு அதிகாரமளிக்கின்றது.

## கண்டியச் சட்டத்தின் கீழ்:

<u>பராமரிப்பு</u>

கண்டியச் சட்டத்தின் கீழ் தம்பதிகளின் ஆதனமானது 2 பகுதியாகப் பாகுபடுத்தப்படலாம்:

### 1. தேடிய ஆதனம்:

இவ்வாதனத்தில் விதவை மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆயுள் நல உரித்து உண்டு. எனவே இதன் விளைவாக அவர்கள் மேற்படி ஆதனத்திலிருந்து பராமரிப்புக் கோர உரித்துடையவர்கள்.

ஆனால் விதவை மனைவி மறுமணம் செய்து கொண்டால் அல்லது பிள்ளைகள் பராய வயதினை அடைந்தால் அவர்கள் மேற்படி பராமரிப்புக்கான உரிமையினை இழந்தவர்களாகக் கருதப்படுவர்.

## 2. பரவணி ஆதனம்:

இது தொடர்பிலான பழைய சட்டம் எது எவ்வாறு இருப்பினும் மனைவி பரவணி / பரம்பரை ஆதனத்திலிருந்து பராமரிப்புக் கோர முடியாது. இதுவே பொதுவான விதி ஆகும். ஆனால் அங்கு தேடிய தேட்ட ஆதனம் இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டும் அவள் பரவணி ஆதனத்திலிருந்து பராமரிப்பு பெறலாம்.

## இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் பராமரிப்பு:

இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் பராமரிப்பு பற்றிய ஏற்பாடு புராதனமானதாகும். மற்றும் அவளைச் சார்ந்துள்ளோரான வேலையாட்கள் உட்பட்ட அனைவரையும் பராமரிக்க வேண்டியது இறைவனால் இடப்பட்டு மத ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான ஒரு கடமையாகக் கருதப்படுகின்றது. இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு என்பது உணவு, உடை, உறையுள் / தங்குமிடம் என்பவற்றைக் கருதும்.

ஒரு முஸ்லீம் பராமரிப்பு வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அதாவது ஒருவன் / ஒருத்தி போதுமான வழிவகையைக் கொண்டிருப்பின் அவன் / அவள் பராமரிப்பு பெறுவதிலிருந்து தடுக்கப்படுகின்றார். 'INDEGENT' என்ற ஆங்கிலப் பதத்தின் கருத்தானது ஒரு முஸ்லிம் தனக்கு போதுமான வழிவகை இல்லாவிடின் அவள் பராமரிப்பு உதவு தொகையைப் பெறுதல் வேண்டும். 'உழைக்கக் கூடிய திறமை' என்பது ஒரு நபர் தனது பலம், உடற்சுகாதாரம், வாழ்க்கை நிலை என்பவற்றுக்கேற்ப சம்பளம் / கூலிக்கு வேலை செய்வதற்கு முடியுமானவராக இருக்க வேண்டும். 'பராமரிக்கக் கூடிய தகுதி' என்பது, உட்கிடையாக பராமரிப்பதற்கான வழிவகையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதாகும். பராமரிக்க வேண்டியதன் நோக்கம் என்பதன் மூலம் கருதப்படுவது, ஒரு நபரின் மேல் சட்டம் சுமத்தும் கடப்பாடுகளான வாழ்வதற்கு தேவையான நிதிவளத்தை உழைத்தல், அதன் மூலம் பராமரிப்பினை வழங்குதல் என்று அமைகின்றது.

## பராமரிப்பினை ஆளும் பொதுக்கோட்பாடுகள்:

சட்ட ரீதியாகத் திருமணம் செய்த மனைவி மட்டுமே தனது கணவனிடமிருந்து தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பராமரிப்பினைக் கோரக்கூடிய உரிமை பெற்றவள் ஆவாள். இங்கு திருமணம் எந்த அளவுக்கு வலிதான ஒன்றாக விளங்குகின்றது என்பது ஆராயப்பட வேண்டிய கேள்வி ஆகும்.

முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணம் வலிதாக அமைய வேண்டுமாயின்:

1. திருமணத்தை முன்மொழிவு செய்தலும் அதனை அங்கீகரித்தலும் இடம்பெற வேண்டும்.
2. முன்மொழிவும் அதனது ஏற்பும் என்பன ஒரே நேரத்தில் நடைபெறல் வேண்டும்.
3. அவர்கள் சித்தசுவாதீனமுள்ளவர்களாகவும் பூரண வயதுடைய முஸ்லிம் களாகவும் இருத்தல் வேண்டும்.

எனவே திருமணம் ஒன்று பதியப்படாவிடின் சட்டம் அதனைத் தண்டனைக்குரிய ஓர் அம்சமாக கருதினாலும் கூட, பராமரிப்புத் தொடர்பில் செலுத்த வேண்டிய பொறுப்புடையவராகின்றார். மேற்படி விதியின் பிரதான அம்சமாக விளங்குவது திருமணமானது சட்டரீதியற்றதாக இருக்கும்போது அல்லது வலிதற்றதாக இருக்கும்போது கணவன் பராமரிப்பு செலுத்த வேண்டிய கடப்பாட்டுக்கு உட்படுகின்றார்.

அதேவேளை மனைவி கணவனுடன் அவனுடைய இல்லத்தில் வாழ மறுப்பின் அவள் கணவனிடமிருந்து பராமரிப்பு பெற்றுக் கொள்ள அருகதையற்றவள். அத்துடன் மனைவி போதுமான / வலிதான காரணமின்றி கணவனின் இல்லத்தை விட்டு நீங்கினாலும் அவள் கணவனிடமிருந்து பராமரிப்பு பெற்றுக் கொள்ள முடியாது.

உதாரணமாக, மனைவி கணவனுடைய சம்மதமின்றி அவன் தன்னை தாக்குவான் என்று பயந்து தற்பாதுகாப்புக்காக அவனது இல்லத்தை விட்டு நீங்குதல்;

- போதிய / நியாயமான காரணம் என்ற அம்சத்தை நிரூபிக்கும் பொறுப்பு மனைவியையே சார்ந்ததாகும்.

- 'வேலையின்றியிருத்தல்' என்ற கணவனின் எதிர்வாதமானது, மனைவியினால் விண்ணப்பிக்கப்படும் பராமரிப்பிற்கு ஓர் எதிர்வாதமாக கருதப்படமாட்டாது.

- பிள்ளைகளைப் பராமரிக்கும் உரிமை தொடர்பாக ஆராயும்போது பிள்ளையின் தந்தமை தொடர்பான கேள்வி பிணக்குக்கு உரிய அம்சமாக கருதப்பட மாட்டாது. பொதுவான விதி என்னவெனில் தந்தை தனது பிள்ளைகளை ஆணோ / பெண்ணோ பராமரிக்க வேண்டிய பொறுப்புடையவராவார். இஸ்லாமிய சட்டத்தின் கீழ் தந்தை தனது மகனை அவனுடைய பராய வயது வரை / அது தொடர்பான சான்றுகள் கிடைக்கப்பெறாவிடின் 15 வயது வரை பராமரிக்கக் கடமைப்பட்டவர்.

மகளைப் பொறுத்தவரை தந்தையின் பராமரிக்கும் கடமை அவள் திருமணம் செய்யும் காலம் வரை நீடிக்கும். தந்தை பராமரிக்க இயலாதவராயின் பராமரிக்கும் கடமை தந்தைவழிப் பாட்டனிடம் சுமத்தப்படும்.

# மனித உரிமைகள் சட்டமும் பெண்களும்

## அறிமுகம்

மானிட வாழ்வின் ஒவ்வோர் அம்சத்துடனும் தொடர்புபடுவதாக மனித உரிமைகள் என்பது மிகப்பரந்த ஒரு தொகுதி உரிமைகளாகும். இது தனிநபர்களது உரிமைகளை உள்ளடக்குவது போலவே மக்கள் குழுக்களதும் சமூகங்களதும் உரிமைகளையும் உள்ளடக்குகின்றது.

மனித உரிமைகள் எவரிடமிருந்தும் கொடையாகவோ அல்லது பரம்பரைச் சொத்தாகவோ பெறப்பட்டவையல்ல. அவை ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் அதனது பிறப்பிலிருந்து உரித்துடையவையாகும். இந்த உரிமைகளைப் பறிக்க எந்த அரசாங்கத்துக்கும் அல்லது நிறுவனத்துக்கும் உரிமை கிடையாது.

ஒவ்வொரு அரசாங்கமும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வல்லதான விதத்தில் தனது சட்டவாக்க, நிறைவேற்றுத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறைச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இந்த மனித உரிமைகளை அரசாங்கத்தின் சொந்தச் சட்டவாக்க, நிறைவேற்றுத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறைச் செயற்பாடுகளே மீறுவதாகவே அநேக சந்தர்ப்பங்கள் உள்ளன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும் அதேவேளை அவற்றைப் பேணுதல் சமூகத்தின் பொறுப்பாக அமைகின்றது.

## பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே!

இந்த விளக்கக் கையேட்டில் நாம் ஆராயக் கருதியுள்ள பெண்கள் உரிமைகள் என்பது மனித உரிமைகள் என்ற பாரிய தொகுதியின் ஒரு சிறிய பகுதியாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும். எனவே, பெண்கள் உரிமைகள் என்பது மனித உரிமைகளேயன்றி வேறேதுமல்ல.

நாங்கள் பெண்களாயினும் மனிதர்கள் என்பதால், ஆண்கள் துய்க்கும் எல்லா உரிமைகளையும் நாமும் துய்க்க வேண்டும். இதுவே இன்றைய கோஷமாகும். இவ்விதத்தில், மனித உரிமைகளின் அடிப்படைகள் பற்றி ஒவ்வொரு பெண்ணுந் தெரிந்திருத்தல் மிக அவசியமாகும். இது உள்ளூர்த் தராதரங்களைச் சர்வதேசத் தராதரங்களுடன் ஒப்பிடவும் வேறுபடுத்தவும் மட்டும் அன்றி அவற்றை எய்துவதற்காக உழைத்தலையும் உள்ளடக்கும். எனவே, ஒருவர் மனித உரிமைகளின் சர்வதேசத் தராதரங்களின் விவரக் குறிப்பையும் அது உள்நாட்டில் ஏற்கப்படுமாற்றையும் அறிந்திருத்தல் என்பது மிக முக்கியமானதாகும்.

## மனித உரிமைகளின் சர்வதேசத் தராதரங்கள்

உலகளாவிய ரீதியில் பார்ப்பின், பல அரசாங்கங்கள் தமது அரசியலமைப்புக் களில் மனித உரிமைகளின் அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்றன. சில இந்தக் கோட்பாடுகளுக்கு இசைவான விதத்தில், இவற்றுக்கு ஜீவனூட்டும் வகையில் உள்நாட்டு நியதிச் சட்டங்களை ஆக்கியிருக்கின்றன. இதனைவிட, பல நாடுகள் பிராந்திய ரீதியில் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட சில விசேட விடயங்களை அங்கீகரிக்கும் விதத்தில் பல பட்டயங்களை ஆக்கியுள்ளன. அமெரிக்கப் பட்டயம், ஆபிரிக்கப் பட்டயம், ஐரோப்பிய பட்டயம் என்பன இவற்றுள் சிலவாகும். இந்த அரசாங்கங்கள் யாவும் 1948இல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் நிறைவேற்றப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினை மிகக் கவனமாக ஆராய்ந்திருக்கின்றன.

இப்பிரகடனத்தின் மூலம் உலகத்தின் மக்களது பிரதிநிதிகள், எல்லா மனிதர்களும் சுதந்திரத்துடன் பிறக்கின்றனர் என்பதுடன் கௌரவத்திலும் உரிமைகளிலும் சமமானவர்கள் என்பதையும் பிரகடனப்படுத்தினர்.

இப்பிரகடனமானது மானிடக் குடும்பத்தின் எல்லா அங்கத்தவர்களதும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் விவரித்து நிற்கின்றது.

இந்தப் பிரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அடிப்படைகளானவை குடியியல், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசக் கட்டுறுத்து, பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேசக் கட்டுறுத்து என அறியப்படுபவை வாயிலாக, சட்டரீதியாகப் பிணிக்கும் கோட்பாடுகளாக மாற்றப்பட்டுள்ளன.

'எல்லா அரசாங்கங்களும் தங்கள் தனிநபர் பிரசைகளை நடாத்தும் விதத்துக்கு வகை சொல்ல வேண்டும் என்பதுடன் சர்வதேசத் தராதரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படவும் வேண்டும்' என்ற புரட்சிகரக் கருத்தின் மீதே இச்சாதனங்கள் அமைந்துள்ளன. இந்த அரசாங்கங்களும் இப்பிரகடனமும் உலகளாவிய ரீதியில் தனிநபர்கள் மீதும் அரசாங்கங்கள் மீதும் பெருமளவில் செல்வாக்கைச் செலுத்தியிருக்கின்றன.

## கட்டுறுத்துக்கள் சொல்வதென்ன?

குடியியல், அரசியல் உரிமைகள் மீதான கட்டுறுத்தானது மானிடர் யாவரதும் உயிர்வாழ்வு; ஆள்சார் சுதந்திரமும் பாதுகாப்பும்; அந்தரங்கம்; சித்திரவதை அல்லது கொடூர, மனிதாபிமானமற்ற நடாத்துகை அல்லது தண்டனை என்பவற்றிலிருந்து விடுபட்டிருக்கும் சுதந்திரம்; எதேச்சாதிகாரக் கைதிலிருந்து விடுவிப்பு; நீதிமுறையான விசாரணை; சிந்தனை, மனச்சாட்சி, மதம் என்பவற்றுக்கான சுதந்திரம்; கருத்துக்கும் வெளியிடுகைக்குமான சுதந்திரம்; அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமைகளை அங்கீகரிக்கின்றது.

பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான கட்டுறுத்தானது வேலை செய்யும் உரிமையும் வேலையை விரும்பியபடி தெரிந்தெடுக்கும் உரிமையும்; நியாயமான ஊதியத்துக்கான உரிமை; தொழிற் சங்கங்களை அமைக்கவும் அவற்றில் சேருவதற்குமான உரிமை; சமூகப் பாதுகாப்புக்கான உரிமை; சுகாதாரத்துக்கான உரிமை; கல்விக்கான உரிமை; உணவு, உடை மற்றும் குடியிருப்புக்கான உரிமை என்பவற்றை அங்கீகரிக்கின்றது.

இவ்விரு கட்டுறுத்துக்களுமே எல்லா மக்கள் குழுமங்களுக்குமான சுயநிர்ணய உரிமையைப் பிரகடனப்படுத்துவதுடன் எல்லா உரிமைகளையும் எல்லோருக்கும் இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், ஆதனம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து என்ற காரணங்கள் தொடர்பில் பாரபட்சமற்றதாக உத்தரவாதமுஞ் செய்கின்றது.

விருப்புரிமைப் பின்னேட்டை ஏற்றங்கீகரித்துள்ள அரசாங்கங்களின் மக்கள்—தத்தமது நாடுகளில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவுக்கு முறையிடுவதற்கான உரிமையும் கொண்டுள்ளனர்.

# சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

1948 திசெம்பர் மாதம் 10ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, மனித உரிமை பற்றிய உலகப் பிரகடனத்தை ஏற்றுச் சாற்றியது. அப்பிரகடனம் மேல்வரும் பக்கங்களில் முற்றுமுழுதாகத் தரப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்நடவடிக்கையின் பின்னர் சபையானது, பிரகடனத்தை வெளியிடுமாறும், அவ்வாறு வெளியிடப் பெற்றதை, "நாடுகள் அல்லது ஆள்பலங்களின் அரசியல் அந்தஸ்துக் காரணமாக எவ்வித வேறுபாடுமில்லாவகையில் எல்லாப் பாடசாலைகளிலும் பிற கல்வி நிறுவனங்களிலும் பரப்பவும், காட்சிக்கு வைக்கவும், வாசிக்கச் செய்யவும், விளக்கவும்" செயற்படுமாறு அங்கத்துவ நாடுகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டது.

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் - முகப்புரை

மனிதக் குடும்பத்தினைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும், அவர்கள் யாவரதும் சமமான, பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளதாதலாலும்,

மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டு மிராண்டித்தனமான செயல்களுக்கு இடமளித்துள்ளதாலும் பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியனவற்றை மனிதன் பூரணமாக துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்துச் சாற்றப்பட்டுள்ளதாதலாலும்,

கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படாமலிருக்க வேண்டுமேல் சட்டத்தின் ஆட்சியால் மனிதவுரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகவுள்ளதாதலாலும்,

நாடுகளிடையே நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதனை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளதாதலாலும்,

ஐக்கிய நாடுகள் சபையிற் கூடிய சகல மக்களும், பட்டயத்தில், அடிப்படை மனித உரிமைகள் பற்றிய தமது நம்பிக்கையை ஒவ்வொரு மனிதப் பிறவியினதும் கௌரவம், பெறுமதியை, ஆண் பெண்ணின் சம உரிமையை மீளவலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலில், சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத் தரமாதியவற்றை மேம்படுத்தத் துணிந்துள்ளாராதலாலும்,

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான உலக மதிப்பையும், அனுட்டானத்தையும் மேம்படுத்தலை, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்று முழுதாகச் செயல் நிலைப்படுத்த அங்கத்துவ நாடுகள் சூளுறுதி கொண்டுள்ளனவாதலாலும்,

இச்சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு, இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கமிருத்தல் முக்கியமுடையதாதலாலும்,

இப்பொழுது :

## <u>பொதுச் சபை பிரகடனப்படுத்துவதாவது</u>

சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு சாதனமும், இப்பட்டயத்தை இடையறாது மனத்திலிருத்தி, இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம்படுத்துதற்குக் கற்பித்தல் மூலமும், கல்வி மூலமும், தேசிய, சர்வதேசிய நிலைப்பட்ட நடவடிக்கைகள் மூலமும் முயலும் நோக்கிற்காகவும், அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும், தத்தம் மக்களிடையேயும், அத்துடன் தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் ஆள்புலத்து மக்களிடையேயும், இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் முழு மொத்தமாக, வலிவும் பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப்பெற்று அநுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்துவதற்காகவும் பயன்படத்தக்க சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது ஈட்டுகையின் பொதுத்தராதரமாகக் கொள்ளத்தக்க இந்த மனித உரிமை உலகப் பொதுப் பிரகடனத்தைப் பொதுச் சபையானது எடுத்துச் சாற்றுகின்றது.

*உறுப்புரை 1 :* மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர்; அவர்கள், மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள், அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.

அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

*உறுப்புரை 2 :* இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத் தோற்றம், ஆதனம் பிறப்பு அல்லது பிற அந்தஸ்து என்பன போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி, இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கு சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர். மேலும், எவரும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டிடை அந்தஸ்தின் அடிப்படையில் – அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக, தன்னாட்சியற்ற நாடாக அல்லது இறைமை வேறேதேனும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினுஞ்சரி – வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

*உறுப்புரை 3 :* வாழ்வதற்கும், சுதந்திரத்தையுடையதாயிருப்பதற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

*உறுப்புரை 4 :* எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது; அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றில் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 5 :* எவரும், சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

*உறுப்புரை 6 :* ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

*உறுப்புரை 7 :* எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும்

உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

*உறுப்புரை 8 :* அவ்வந் நாட்டின் அரசியலமைப்பினால், அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு உரிமையுடையவர்கள்.

*உறுப்புரை 9 :* ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தல் ஆகியவற்றுக்கு எவரும் ஆட்படுத்தப்படலாகாது.

*உறுப்புரை 10 :* அவர்களது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் அவர்களுக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான நடுநிலை தவறாத நியாய சபையினால் செய்யப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

*உறுப்புரை 11 :* (1) தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும், பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளென காண்பிக்கப்படும் வரை, சுற்றவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

(2) தேசிய, சர்வதேசிய நாட்டிடைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை புரியப்பட்ட நேரத்தில் அச்செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாக அமையாததாகவிருந்து அச்செயல்

அல்லது செய்யாமை காரணமாக, எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக்குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

*உறுப்புரை 12 :* ஒவ்வொருவரும் அவ்வவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக, ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் தலையிடப் படுவதற்கோ அல்லது அவரது மரியாதை, நன்மதிப்பு என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

*உறுப்புரை 13 :* (1) ஒவ்வொரு நாட்டினதும் எல்லைகளுக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும் தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

*உறுப்புரை 14 :* (1) வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(2) அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாகவும், அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொகுப்புகள் சம்பந்தமாகவும் இவ்வுரிமை கேட்டுப் பெறப்படலாகாது.

*உறுப்புரை 15 :* (1) ஒரு தேசிய இனத்தினராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

(2) எவரினதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் இழப்பிக்கப்படுதலோ அவரது தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

*உறுப்புரை 16 :* (1) முழு வயதடைந்த ஆண்களும் பெண்களும், இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பன காரணமான கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ் செய்யும் பொழுதும் திருமணமாகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப் படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

(2) திருமணம் முடிக்கவிருக்கும் வாழ்க்கைத் துணைவோரின் சுதந்திரமான, முழுச் சம்மதத்துடன் மட்டுமே திருமணம் முடிக்கப்படுதல் வேண்டும்.

(3) குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

*உறுப்புரை 17 :* (1) தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரினதும் ஆதனம் ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் இழக்கப்படுதல் ஆகாது.

*உறுப்புரை 18 :* சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தமது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அநுட்டானம் என்பன மூலமும் தத்தமது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், வேறொருவருடன் கூடியும், பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

*உறுப்புரை 19 :* கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது, தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருத்தற்கும் எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகளைப் பொருட்படுத் தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

*உறுப்புரை 20 :* (1) சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.

(2) ஒரு கழகத்தினைச் சேர்ந்தவராகவிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

*உறுப்புரை 21 :* (1) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

(3) மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும்.

இவ்விருப்பமானது, காலாகாலம், உண்மையாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் நடைபெறுதல் வேண்டும்.

*உறுப்புரை 22 :* சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும், ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும் தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும் இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

*உறுப்புரை 23 :* (1) ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கான, அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான செய்யுந் தொழிலில் நியாயமானதும் அநுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகட்கு உரியோராயிருப்பதற்கான, தொழிலின்மைக்கெதிரான பாதுகாப்பு உடையோராயிருப்பதற்கான உரிமையை உடையவர்.

(2) ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

(3) வேலை செய்யவும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியையவுள்ள ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அநுகூலமானதுமான ஊதியத்திற்கு

உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களைப் பாதுகாப் பதற்கெனத் தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

*உறுப்புரை 24 :* இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையர்; இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை, சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

*உறுப்புரை 25 :* (1) ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட, தமதும், தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்துக்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

(2) தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும், அவை திருமண உறவினுட் பிறந்தவையாயினுஞ்சரி அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினுஞ்சரி, சமமான சமூகப் பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன.

*உறுப்புரை 26 :* (1) ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். தொடக்கக்

கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் உயர் தொழிற் கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கனவாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையடிப்படையின் மீது சமமான முறையில் கிடைக்கக் கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுதாக விருத்தி செய்யுமுகமாகவும் மனிதவுரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்துமுக மாகவும் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும், இன அல்லது மதக் குழுவினருக் கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.

(3) தமது குழந்தைகளுக்குப் புகட்டப்பட வேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

*உறுப்புரை 27 :* (1) சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(2) அறிவியல், இலக்கிய, கலைப் படைப்பின் ஆக்கியற் கர்த்தர் என்ற வகையில், அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்க நெறி, பருப்பொருள் நலங்களின் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

*உறுப்புரை 28 :* இப்பிரகடனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக, சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

*உறுப்புரை 29 :* (1) எந்த ஒரு சமூகத்தினுள் மாத்திரமே தத்தமது ஆளுமையின் கட்டற்ற, பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ, அந்தச் சமூகத்தின்பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் அவரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் பொழுது இன்னொருவரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்குமுரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காகவும், சனநாயக சமுதாயமொன்றின் ஒழுக்கசீலம், பொது மக்கள் ஒழுங்கமைதி, பொது சேமநலன் என்பவற்றுக்கு நீதியான முறையில் தேவைப்படக்கூடியவற்றை ஏற்படுத்தல் வேண்டுமெனும் நோக்கத்துக்காகவும் மட்டுமே சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுப்படுபவராயமைதல் வேண்டும்.

(3) இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணாக எவ்விடத்திலேனும் பிரயோகிக்கப்படலாகாது.

*உறுப்புரை 30 :* இப்பிரகடனத்திலுள்ள எவையும், இதன்கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றிலுள்ள எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும் முயற்சியில் ஈடுபடுவதற்கும் அல்லது செயலெதனையும் புரிவதற்கும், எந்த ஒரு நாட்டுக்கோ குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ உட்கிடையாக யாதேனும் உரிமையளிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

## எமது வெளியீடுகள்

නන්දමිත්‍ර - රොස්ලින්ඩ මැන්ඩිස්

ඩොරීන් වික්‍රමසිංහ - (ශ්‍රී ලංකාවෙ ජනතා අරගලයෙහි පුරෝගාමි වූ බටහිර නාත්තාවක්) - කුමාරි ජයවර්ධන

ලුහ්සුංගේ පතිවත ඉබසන්ගේ බෝනික්කී - පරිවර්තනය ධර්මසිරි ජයකොඩි

ඇගේ ලෝකය - මොනිකා රුවන්පතිරණ

ස්ත්‍රීවාදී දර්ශන කෝණයෙන් සමාජ න්‍යායයන් විග්‍රහ කිරීමක්

பெண்விடுதலை வாதத்தின் பிரச்சனை மையம் அது ஒரு மேலைத்தேய கோட்பாடா? ~ செல்வி திருச்சந்திரன்

வார்ப்புகள் ~ பாரதி

இந்தியர்களது இலங்கை வாழ்க்கை நிலைமை ~ மீனாட்சி அம்மாள்

பெண்களின் சுவடுகளில் இருந்து சில அடிகள் ~ சாந்தி சச்சிதானந்தன்

பெண்நிலைச் சிந்தனைகள் ~ சித்திரலேகா மௌனகுரு

பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும் ~ செல்வி திருச்சந்திரன்

கடவுளரும் மனிதரும் (சிறுகதைத் தொகுதி) ~ பவானி ஆழ்வாப்பிள்ளை

தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு ~ செல்வி திருச்சந்திரன்

சக்தி பிறக்குது ~ சி. மௌனகுரு

The Political of Gender and Women's Agency in Post-Colonial Sri Lanka - Selvy Thiruchandran

Feminism in Sri Lanka in the Decade - Kumari Jayawardane

Fragments of a Journey - Jean Arasanayagam

Some Literary Women of Sri Lanka - Eva Ranaweera

Images - Edited by Selvy Thiruchandran

Life Under Milkwood: Women workers in Rubber Plantation, An Overview - By Jayadeva Uyangoda

Ideology, Cast, Class and Gender - Selvy Thiruchandran

The Spectrum of Femininity : A Process of Deconstruction - Selvy Thiruchandran

பெண்நிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும் : ஒரு சமூகவியல் நோக்கு ~ செல்வி திருச்சந்திரன்

*இவற்றை எம் நிறுவனத்திலும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.*